விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 மாசி 2 ரபி. ஆகி 30 இதழ் 4

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 14—2—83

## ஆனையிறவு தடுப்புமுகாமிலுள்ள மாணவர்கள் உட்பட 6பேருக்கு 'யோகேஸ்' சட்ட ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஆனையிறவு இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் மாணவர்கள் உட்பட ஆறுபேரை, சட்டத்தரணியும் யாழ். எம். பி.யுமான திரு. வெ. யோகேஸ்வரனும், சட்டத்தரணி பொன்னுத்துரை சிவபாலனும் நேற்றுக்காலை சந்தித்து சட்டஆலோசனை வழங்கி அவர்களின் நலன்களையும் கவனித்தனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் எஸ். ராஜாஜி, மானிப்பாய் இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் முருகேசு பிள்ளை நவீந்திரராஜா, மற்றும் சுழிபுரத்தைச் சேர்ந்த எம். சின்னையா, கிளிநொச்சி வங்கியைச் சேர்ந்த இராஜரட்ணம், மாணிக்கம் ராஜன், சுரேஷ்குமார் ஆகிய ஆறுபேரையுமே சட்டத்தரணிகள் இருவரும் சந்தித்து உரையாடினர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அனுமதியுடன் பாதுகாப்பு அமைச்சு வழங்கிய உத்தரவை பெற்றபின்னரே இரு சட்டத்தரணிகளும் சந்திக்க முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முகாமில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சுழிபுரம் விக்ரோரியாக்கல்லூரி மாணவர் மயில்வாகனம், மற்றும் தேவகுமாரன் அல்லது அரபாத், கணேசலிங்கம், அந்தோனிப்பிள்ளை அல்லது

8-ம் பக்கம் பார்க்க)

# யாழ். மாவட்டத்தில் ஊர்காவல்படை!

## பொலிஸ் நிலையங்களில் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரசு-கூட்டணி உயர் மட்ட பேச்சுவார்த்தையின்போது முடிவுசெய்யப்பட்ட விஷயங்களில் ஒன்றான ஊர்காவல் படைஅமைக்கும் ஆரம்ப வேலைகள் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொலிஸ் நிலையங்களில் ஊர்காவல் படையினருக்கான நேர்முகப்பரீட்சை வடபகுதி பொலிஸ்நிலையங்களில் நடைபெற்றுள்ளது.

வடபகுதியில் திலைப்பு, கொள்ளை, களவு, வழிப்பறி போன்ற குற்றச்சம்பவங்கள் அதிகரித்து பொதுமக்களை வீடுகளிலும், வீதிகளிலும் அச்சத்துடன் வாழவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியது.

இதனைத்தொடர்ந்து, 1982ம் ஆண்டு ஏப்ரல் 5ம் திகதி தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும், அரசாங்கத்துக்குமிடையில் நடைபெற்ற உயர்மட்டப் பேச்சுவார்த்தையின்போது எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், வடபகுதியில் 'ஊர்காவல் படை அவசியம் அமைக்கப்படவேண்டும்' என்று வலியுறுத்தியிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

யாழ். மாவட்டத்தில் அமைக்கப்படும் ஊர்காவல்படைகள் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின்கீழ் இயங்கவேண்டுமென திரு. அமிர்தலிங்கம் பேச்சுவார்த்தையின்போது சுட்டிக்காட்டியிருந்தார். இப்பேச்சுவார்த்தையின்போது, யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா, சட்டத்தரணி நீலன் திருச்செல்வம் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். (மா)

## சங்கக்கிளையில் துணிவகைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உடுவில் புடவைக் கடை கிளையிலிருந்து 15 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட துணிவகைகள் திருடப்பட்டுள்ளன.

கிளைக்கடையின் ஓட்டைப் பிரித்து இறங்கிய திருடர்கள், கடைக் கதவை உடைத்துச் செல்லாமல் துணிவகைகளுடன் ஓட்டைவழியாகவே திருடிச்சென்றிருப்பதாக அக்கிளையின் மனேஜர் எஸ். செல்வராசா சுன்னாகம் பொலிஸில் புகார்செய்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். ராஜலிங்கம் விசாரணைசெய்து வருகிறார். [மா]

## கைத்துப்பாக்கியால் இருவர் சுட்டனர்"

## 'நாதன்' மரணவிசாரணையில் சகோதரி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"ஒருவர் எனது தம்பியின் கழுத்தைப் பின்பக்கமாக அமுக்கியபொழுது தம்பி கீழேவிழுந்தார். மற்ற இருவரும் அவரை நோக்கி கைத்துப்பாக்கியால் சுட்டனர். சூடு விழுந்ததும் எனது தம்பி 'சுட்டுப்போட்டார்கள்' என்று சத்தம்போட்டார்."

இவ்வாறு நேற்று முன்தினமிரவு துப்பாக்கியால் சுடப்பட் மரணமான நாதன் என்றழைக்கப்படும் செல்வரட்ணம் செல்வநாதன் மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் இறந்தவரின் சகோதரி திருமதி சத்தியராணி ஜெயரத்தினம் (26 வயது) தெரிவித்தார்.

பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடாத்தினார்.

சுன்னாகம் பொலிஸ் நிலை சப் இன்ஸ்பெக்டர் எஸ். சிவராசா; கான்ஸ்டபிள் ஏ. சி. ரட்ணராஜா சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

### இறந்தவரின் வீட்டில் பிரேத பரிசோதனை

இறந்தவரின் வீட்டிலேயே மரண விசாரணை, பிரேதபரிசோதனை ஆகியன நடைபெற்றன.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் கோண்டாவில் மேற்குப் பாடசாலை வீதியில் வைத்து நாதன் என்றழைக்கப்படும் செல்வநாதன் இனம் தெரியாத 3 இளைஞர்களால் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

திருமதி சத்தியராணி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

### தந்தையார் வீட்டிற்குச்சென்றோம்

"சம்பவம் நடைபெற்ற தினம் 3 மணியளவில் எனது வீட்டிலிருந்து 25 யார் தூரத்திலுள்ள தந்தையார்வீட்டுக்கு நானும் இறந்தவரும் சென்றோம் பின்னர் நான் ஆட்டுக்கு குழைவெட்டுவதற்காகத் திரும்பவும் எனது வீடுவந்து சேர்ந்தேன்.

இறந்தவர் திரும்பவும் எனது வீடு நோக்கி வந்துகொண்டிருந்தார். அப்பொழுது வீட்டின் ஒழுங்கையில் இனம்தெரியாத மூவர் நின்றுகொண்டிருந்தனர். அவர்களில் 5 அடி 6 அங்குல உயர முள்ள பெல்ஸ் போட்ட ஒருவர் எனது தம்பியின் பின்பக்கமாக வந்தார். அவர் தம்பியின் கழுத்தை அழுத்திப்பிடித்து கீழே அமுக்கினார், தம்பி அவரைப்பின் பக்கமாகத் தள்ளிக்கொண்டிருந்தார். மற்ற இருவரில் ஒருவர் கையில் வைத்திருந்த சிறிய துப்பாக்கியால் தம்பியாரை நோக்கி காலிலும் பின்னர் தலையையும் நோக்கிச்சுட்டார். எனக்கு துப்பாக்கியால் சுட்ட சத்தம் கேட்டது. மற்றவரும் கையில் சிறியதுப்பாக்கி வைத்திருந்ததைக் கண்டேன். பின்னர் எனது தம்பியைச் சுட்டுப்போட்டார்கள் என்று கிலர் சத்தம் போட்டதும்

(8ம் பக்கம் பார்க்க)

## சுன்னாகம், காங்கேசன்துறையில் பாதிப்புற்ற வர்த்தகர்களுக்கும் நஷ்டஈடு பெற்றுக்கொடுப்பேன்" - அமிர்

(மாவிட்டபுரம்)

மாவட்ட அபிவிருத்திசபை தேர்தல் காலத்தில் தீக்கிரையாக்கப்பட்ட சுன்னாகம், காங்கேசன்துறை ஆகிய பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பாக நாம் அரசிடம் வற்புறுத்தி வந்தோம். யாழ் நகர நஷ்டஈடுபற்றிய அலுவல்கள் முடிந்ததும் இதுபற்றி ஆராய்ந்து நஷ்டஈடுவழங்குவதாக ஜனாதிபதி எழுத்து மூலம் எமக்கு உறுதி தந்திருந்தார். ஆனால் இன்றுவரை அதனைச் செய்யாது இழுத்தடிக்கிறார்கள். இதனை மேலும் வலியுறுத்தி இந்த வர்த்தகர்களுக்கு விரைவில் நஷ்டஈடு கிடைக்க ஆவனசெய்வேன்.

இவ்வாறு மயிலிட்டி வடக்கு கிராமோதய சபையின்கோரிக்கையொன்றுக்கும் பதிலளித்த எதிர்க்கட்சி முதல்வரும் காங்கேசன்துறை எம். பி யுமான திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தல்கால வன்செயல் நஷ்டஈடு யாழ் நகர்ப்பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைத்துள்ளது என்றும் ஆனால் காங்கேசன்துறை சுன்னாகம் பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னமும் நஷ்டஈடு கிடைக்கவில்லை என்றும் காங்கேசன்துறையில் பாதிக்கப்பட்ட பல வர்த்தகர்கள் மயிலிட்டி வடக்கு கிராமோதயசபை பிரிவில் வசிப்பவர்கள் என்றும் அவர்கள் பெரிதும் கஷ்டப்படுவதால் இதுவிடயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கவனம் எடுத்து இவர்களுக்கு உதவவேண்டும்" என்றும் மேற்படி கிராமோதய சபை கோரியிருந்தது

திரு. அமிர்தலிங்கம் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்: காங்கேசன்துறை, சுன்னாகம் பகுதி சேதங்களை யாழ். அரச அதிபரே மதிப்பீடு செய்யலாமென ஜனாதிபதி கூறியிருந்தார். அதனால் நான் யாழ் அரச அதிபருடனும் இதுபற்றி தொடர்பு கொண்டேன். அவர் பல கடிதங்களை ஜனாதிபதிக்கு எழுதியும் பதிலில்லை எனக் கூறியுள்ளார். ஆகவே இதுபற்றி தொடர்ந்து வலியுறுத்தி இவர்களுக்கும் நஷ்டஈடு பெற்றுக்கொடுக்க ஆவனசெய்வேன்" என்றார். (க)

## தப்பிஓடும் குற்றவாளிகளை ஒப்படைக்கும் சட்டம் மறுபரிசீலனை செய்யப்படுமென்று சிறிதத் றம்பால் தகவல்

(கொழும்பு)

பொதுநலவமைப்பு நாடுகளின் நீதித்துறை அமைச்சர்களின் மகாநாடு இன்று காலை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேசமண்டபத்தில்ஆரம்பமாகவுள்ளது.

இம்மகாநாட்டை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆரம்பித்துவைப்பார்.

இம்மகாநாட்டில் தமதுநாடுகளில் குற்றச்செயல்களில் ஈடுபட்டுவிட்டு வெளிநாடுகளுக்கு தப்பியோடியுள்ள குற்றவாளிகளை திரும்பவும் அந்த நாடுகளிடம் ஒப்படைப்பதற்கான திட்டம்பற்றி மறுபரிசீலனை செய்யப்படுமென்று பொதுநலவமைப்பு நாடுகளின் செயலாளர்நாயகம் திரு. சிறிதத் றம்பால் தெரிவித்தார்.

இம்மகாநாட்டில் நீதியமைச்சர் கலாநிதி நிஸங்க விஜேரத்ன, பிரதமந்திரியாசர் திரு. நெவில் சமரக்கோன் உட்படபலர் உரையாற்றவுள்ளனர். [வெ]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய நாஷனல் வீடியோ 'டெக்' Two-In-One, புகைப் படக்கமிரா என்பன விற்பனைக்குண்டு. தேவச்சந்திரன், 77, பாரதிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 6167

கற்பகப்பிள்ளையார் கோவிலுக்கு உரும்பராய் அண்மையில் வீடுகட்டக்கூடிய நாலே முக்கால் பரப்பு காணி விற்பனைக்குண்டு. பலாலி வீதியில் இருந்து காணிக்கு நேர் பாதை உண்டு. தொடர்புகொள்க 14, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். 6171

இணை மற்றும் வசதிகளுடன் புதிய வீடு [மூன்று அறைகள் கொண்டது] 2 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ. மாமகேசன். ஆறுமுகம் ஒழுங்கை, 3-ம் கட்டை, கல்லியன்காடு. 6187

## தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு ஜி. ஸி. ஈ. (சாதாரண) சித்தியெய்திய ஆங்கில தட்டெழுத்து அனுபவமுள்ள பெண் லிகிதர் உடன் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 6169, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். (6169)

லேத் மெஷினில் வேலைசெய்வதற்கு அனுபவம் வாய்ந்த லேத் மேன் உடனடியாகத் தேவை. கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேரில் வரவும். நாஷனல் ரேணேர்ஸ், நா: 9, கிரான்லி ரோட், யாழ்ப்பாணம். (6174)

யாழ். நகரிலுள்ள இசை மன்றத்திற்கு வார இறுதிநாட்களில் வீணை, நடனம் கற்பிக்க ஆசிரியை தேவை. தகைமையுள்ளோர் மட்டும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல:6170, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 6170)

நாவலர் வீதியில் சகல வசதிகளும் உள்ள வீடு ரூபா 100 000/-ஒற்றிக்கு கொடுக்கப்படும், அலுவலகமாகவும் பாவிக்கலாம். விண்ணப்பிக்க: விளம்பர இல: 6188, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 6188

## பயிற்சி

3 மாத எலக்றிக்கல் வயறிங் பயிற்சி 10-2-83-ல். ஆரம்பமாகியுள்ளது. சேர விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்: Institute of Engineering Technology, 11B, Momsac building, Stanley Road, Jaffna. 6168

# அலஸ்ஆணைக்குழு விசாரணை

[காலி]

காலி வன்செயல்கள் தொடர்பான அலஸ் ஆணைக்குழுவின் விசாரணைகள் நாளை செவ்வாய்க்கிழமை மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

இரண்டாம் கட்ட விசாரணையே இம்முறை நடைபெறவுள்ளது.

இந்த விசாரணையை ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. ஏ. ஸி. அலஸ் காலி குடும்பநீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்வார்.

# சர்வமத மாநாடு

புதுடில்லி, பெப். 13

அணு ஆயுத நெருக்கடியிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் விதத்தில் சமயஸ்தாபனங்கள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து சர்வமத மகாநாடொன்று புதுடில்லியில் இடம்பெறவுள்ளது.

இந்த மகாநாட்டை உலக மத சம்மேளனத்தின் ஆசிய நிலையம் ஒழுங்கு செய்துள்ளது.

'நோபல்' பரிசு பெற்ற திரேசா அம்மையார் இம்மகாநாட்டில் பிரதமவிருந்தினராக கலந்துகொள்வார். சர்வதேச நீதிமன்றத் தலைவர் திரு. நாகேந்திரசிங் மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார்.

இலங்கை, கொரியா, ஜப்பான், இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மத அறிஞர்கள் இம் மகாநாட்டில் பங்கு பற்றுவார்கள். (கி)

# கிளிநொச்சி எம். பி.க்கு பாராட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள பாடசாலைகளுக்குத் தொலைக் காட்சிப் பெட்டிகளை அன்பளிப்புச் செய்துவரும் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரியை பாடசாலை அதிபர்களும் பெற்றோர்களும் தொகுதி மக்களும் பாராட்டியுள்ளனர்.

கல்வியமைச்சின் ஆதரவுடன் பன்முக வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு இருபத்தொரு பாடசாலைகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகளை எம்.பி. வழங்கியிருந்தார். இவரது முன்மாதிரியைப் பாராட்டி நூற்றுக்கணக்கான கடிதங்களை தொகுதி மக்களும் மாணவர்களின் பெற்றோரும் அனுப்பியுள்ளனர். [ச]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
இராமநாதன் நுண்கலைக்கழகம்
இசைக்கலைமணி/ நாட்டியக்கலைமணிப் பயிற்சிநெறியினைப்

## பயிலுவதற்கான அனுமதி 1983

மேற்குறித்த கல்விநெறியினைப் பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் 1983 மார்ச் 09-ந்திகதிவரைஎன்னுல் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களும் மேலதிக விபரங்களும் 23×10 செ. மீ. அளவினதான உங்கள் முகவரி கொண்ட முத்திரை ஒட்டப்பட்ட டித மேலுறையை உதவிப் பதிவாளர், தேர்வுகள் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

பதிவாளர்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
11-02-1983. (6184)

# திருமலையில் காங்கிரஸ் கிளை

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் தமிழ்க் காங்கிரஸின் கிளை இம்மாதம் 19ம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் இக்கிளையைத் திறந்து வைப்பார்.

இத்திறப்பு விழாவில் திரு. மோதிலால்நேரு, வாலிப முன்னணி செயலாளர் திரு. ஆர். இ. ஆனந்தராசா உட்பட பலர் உரை நிகழ்த்துவர். (மா)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், அரசடி வீதி இல 83/3 [புதிய] 67 [பழைய] காலஞ்சென்ற சின்னத்தம்பி முத்துத்தம்பி பெண் விஜயம்மா என்பவரின் மரண சாதனமில்லா மரணச் சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்
யாழ்ப்பாணம், அரசடி வீதி இல 83/3
சின்னத்தம்பி முத்துத் தம்பி

மனுதார்

மரணச்சொத்து நியாயாதிக்கம் இல. 3712

மேற்படி மரணமெய்தியவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்துக்களை நிர்வகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி வழக்கு தாக்கல்செய்யப்பட்டு பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் அக்கறை உடையவர் எவரேனும் இந்நீதிமன்றத்தில் 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ந் தேதியன்று காலை 9 மணிக்குத் தோன்றி மேற்படி பின்னுறுதிக்கட்டளை முற்றாக்கப்படுவதற்கு எதிராக காரணம் காட்டாவிடில் குறித்த பின்னுறுதிக்கட்டளை முற்றாக்கப்படும் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நீதிமன்றக்கட்டளைப்படி
1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9-ந் திகதி

தா. குலஞானம்
பதிவாளர்

6155

கிளி. வர்த்தகர் மர்மமரணம்

# பொலிஸ் வலையில் மேலும் நால்வர் சிக்குவர்?

[கிளிநொச்சி]

கிளிநொச்சிவர்த்தகர் இராசநாயகத்தின் மர்ம மரணம் தொடர்பாக மேலும் நால்வர் கைது செய்யப்படலாம் என்று பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

ஏற்கனவே இறந்தவரின் சகோதரர், அவரது மகன், நண்பன் ஆகிய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மரணம்சம்பவித்தஇடத்தை நேற்று முன்தினம் வவுனியா ஏ. எஸ் பி திரு சுவேந்திரன் வந்து பார்வையிட்டுச் சென்றார்.

யாழ்ப்பாணத்திலிருந்துஇன்னமும் ரசாயனப் பரிசோதனை முடிவுபற்றியஅறிக்கை கிடைக்காமையால் மரணவிசாரணையின் தீர்ப்பு வழங்கப்படாமல் இருக்கிறது.

இன்ஸ்பெக்டர் ரணசிங்க தலைமையில் புலன் விசாரணைகள் தொடர்கின்றன.

# நீரிறைக்கும் யந்திரம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ், பண்ணை சிறுவர் தரும இல்லத்திற்கு யாழ், ரோட்டரிக் கழகத்தினர் சுமார் 5000 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் யந்திரத்தையும் உபகரணங்களையும் அன்பளிப்புச் செய்தனர் யாழ், ரோட்டரிக் கழகத் தலைவர் கலாநிதி எஸ். எஸ். சேனாதிராசா யந்திரத்தை இயக்கிவைத்தார். கழகத்தினர் சிறுவர்களைப் பரிசோதித்து பூச்சி மருந்தும் வழங்கினர். [க]

# பிஷப் இல்லத்தில் 2 லட்சம் ரூபா திருட்டு!

[காலி]

காலி அலோஷியஸ் பிஷப் இல்லத்திலிருந்து 20,3,340 ரூபா திருடப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மேற்படி தேவாலயத்தைச் சேர்ந்த ரேரன் லியனகே பாதிரியார் பொலிசில் புகார் செய்துள்ளார்.

பணத்தை வைத்திருந்த சூட்கேஸ் ஒன்றையும், பெட்டி ஒன்றையும் பொலிசார் கைவிரல் ரேகை நிபுணர்களைக் கொண்டு படம் எடுத்தனர்.

காலியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இத்திருட்டுப் பற்றி காலி பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். [ச]

# ஆலோசனை மாநாடு

[வவுனியா]

வவுனியாவில் அடுத்த மாதம் 4, 5, 6-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் தேசிய இளைஞர் விழா தொடர்பான ஏற்பாடு சம்பந்தமாக ஆலோசனை மகாநாடொன்று வவுனியா கச்சேரியில் நடைபெற்றது.

கச்சேரி உயர்அதிகாரிகள், தேசிய இளைஞர் சேவை மன்ற அலுவலர்கள், இங்குள்ள நான்கு பாடசாலை அதிபர்கள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

விழா தொடர்பான ஏற்பாடுகளுக்கு தனித்தனி குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் 15—29 வயதிற்கு இடைப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

பலதரப்பட்ட விளையாட்டுப்போட்டிகள் ஆண், பெண் இருபாலாருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவிருக்கும் இத் தேசிய இளைஞர் விழாவை சிறப்பான முறையில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

வருடமொன்றுக்கு உங்கள் பணத்திற்கு
26% தொடக்கம் 30% வரை
வட்டி கொடுக்கப்படும்.
குறைந்த தொகை ரூபா 1000/-
விபரங்களுக்கு:
யாழ். பிறப்பட்டி ரேட்ஸ் லிமிற்.
3, நவீன சந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
போன்: 23698

சாவகச்சேரி துர்க்கை அம்மன் தேவஸ்தான

## அறிவித்தல்

இன்று (14-2-83)-ம் திகதி திருப்பணி நன்கொடை நிதிக்காக நடாத்த இருந்த நிகழ்ச்சி தவிர்க்கமுடியாத காரணத்தால் 11-4-83 பங்குனித்திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அடியார்களுக்கு அறியத்தருகிறோம்

இங்ஙனம்
துர்க்கை அம்மன் தேவஸ்தானம்,
சாவகச்சேரி. (6189)

உ

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.
பழைய மாணவர் சங்கம்

## பொதுக் கூட்டம்

இடம்: கல்லூரிப் பிரதான மண்டபம்
காலம்: ஞாயிற்றுக்கிழமை 1983-02-20
நேரம்: காலை 9-00 மணி

தவறாது சமுகம் தரவும்.

இ. சச்சிதானந்தம் — தலைவர்
சி. சண்முகராசா — உப காரியதரிசி

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (6180)

# சிறுவர்தின விழா

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கிராமோதயசபை சிறுவர் தினவிழா இம்மாதம் 19ம் திகதி பிற்பகல் நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. நல்லூர் கிராமோதயசபைத் தலைவர் சட்டத்தரணி இ. கமலநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பியுமான திரு எம். சிவசிதம்பரம், யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், கோப்பாய் எம். பி திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம், யாழ் மாவட்ட அபிவிருத்திசபை உபதலைவர் சட்டத்தரணி சி. நாகராசா, நல்லூர் சிறுவர் சங்கத்தலைவி திருமதி ந ஜெகதீசன் ஆகியோர் உரைநிகழ்த்துவர். [மா]

# தாம்போதியில் சிரமதானப் பணி

(புலோலி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விசேட சேவை உத்தியோகத்தர்கள் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு விசேட சேவை உத்தியோகத்தர்களும் இம் மாதம் 26ம் திகதி மகாதேவா தாம்போதி பாதையில் சிரமதானத்தில் ஈடுபடவுள்ளனர்.

அன்றையதினம் இவர்களுடன் பூநகரி உதவி அரசாங்க அதிபர்பிரிவு விசேட சேவை உத்தியோகத்தர்களும் கிராம சேவை அலுவலர்களும் சிரமதானத்தில் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ பெகின் அரசை ராஜினமா செய்யுமாறு கோரி

# ரெல்அவிவ் வீதிகளில் ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர் ஆர்ப்பாட்டம்!

## லெபனனிலிருந்து படைகளை வாபஸ் பெறவும் கோரிக்கை!

ரெல்அவிவ், பெ. 13

திரு. மெனச்சம் பெகின் தலைமையிலான இஸ்ரேலிய ஆளுங்கட்சியை ராஜினமாச் செய்யும்படி ஆயிரக்கணக்கான இஸ்ரேலியமக்கள் தலைநகரானரெல்அவிவ்வில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கைகளில் சுலோக அட்டைகள், பதாகைகளுடன், தீவட்டிகளையும் ஏந்தி நின்று ஆர்ப்பரித்தனர்.

தற்போது லெபனனில் நிலைகொண்டுள்ள இஸ்ரேலியப் படைகள் உடனடியாக விலக்கப்பட வேண்டுமென்றும் இவர்கள் கோஷமெழுப்பினர்.

இவ்வாறு பெகின் அரசுக்கு எதிரானவர்களும், பெய்ருட் படுகொலைகளைக் கண்டிப்பவர்களும் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியிருக்க, இன்னொரு புறத்தில் ஷரோனையும், பெகின் அரசையும் ஆதரிப்பவர்கள் ஆளுங்கட்சிக்கு ஆதரவு தெரிவித்து கோஷமெழுப்பிக் கொண்டிருந்தனர்.

இரு சாராரும் தத்தமது நோக்கங்களை வெளிக்காட்டும் வகையில் கேலிச்சித்திர அட்டைகளையும் வைத்து நின்றனர்.

இதேவேளை ராஜினமாச் செய்துள்ள திரு. ஏரியல் ஷரோன், தாம் பதவியிலிருந்து ராஜினமாச் செய்துள்ள போதிலும் அரசிலிருந்து விலகப்போவதில்லையென்று தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சிச் சேவைக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர். அத்துடன் தீவிர இஸ்ரேலியர்கள் மத்தியில் உரையாற்றுகையில் பல தடவைகள் தமது விளக்கங்களுக்கு பலத்த சரகோஷ வரவேற்பினையும் அவர் பெற்றார். (கி)

## மத்திய பிரதேஷிலும் இந்திரா காங்கிரஸ் வெற்றி!

புதுடில்லி, பெப். 13

மத்திய பிரதேஷில் நடைபெற்ற முனிசிப்பல் தேர்தலிலும் இந்திரா காங்கிரஸ்கட்சி அதிபெரும் பான்மையுடன் வெற்றிபெற்றுள்ளது

இம்மாநிலத்தில் 56 இடங்களுக்கான போட்டியிடம்பெற்றது. இதில் இந்திரா காங்கிரஸ் 40 இடங்களைப் பெற்றது. பாரதீயஜனதாகட்சி 11 இடங்களைக் கைப்பற்றியது. கம்யூனிஸ்ட் கட்சியும், சில சுயேட்சை வேட்பாளர்களும் தலா ஒவ்வொரு தொகுதிகளாக மிகுதி இடங்களைக் கைப்பற்றினர். (கி)

## பண்ணைக் கூலியாளாக இளவரசர் சார்ள்ஸ்

லண்டன், பெப். 13

பிரிட்டனின் முடிக்குரியவரான 34 வயதுடைய இளவரசர் சார்ள்ஸ் கடந்த வாரத்தில் ஐந்து தினங்கள் முழுக்க முழுக்க ஒரு பண்ணைக் கூலியாளராக கடமையாற்றினர்!

தென்மேற்கு இங்கிலாந்திலுள்ள அரசு குடும்பத்துக்குச் சொந்தமான பண்ணையொன்றிலேயே அவர் இவ்வாறு செயல்பட்டார்.

இந்தப் பண்ணையை ஒரு விவசாயக் குடும்பமொன்று பராமரித்துவருகின்றது. இந்தக் குடும்பத்துடனேயே இளவரசர் சார்ள்ஸ் அந்த ஐந்து தினங்களைக் கழித்தார்

விடியற்காலையில் எழுந்து சென்று மாட்டுத்தொழுவத்தில் உள்ள பசுக்களிலிருந்து பால் கறத்தல்! பன்னிரண்டு மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக கால்நடைகளைப் பாதுகாத்தல் போன்ற கடமைகளைச் சார்ள்ஸ் பண்ணைக் கூலியாளுக்கான உடையுடன் மேற்கொண்டார்.

கடந்த டிசம்பர் மாதத்திலேயே இவ்வாறு பண்ணையில் சில தினங்களைக் கழிக்க இளவரசர் திட்டமிட்டிருந்தாராம்!

இவ்வாறு பண்ணையில் கடமைபுரிந்தது தமக்கு பெரும் திருப்தியளிக்கிறது என்றும், இதன்மூலம் பண்ணையாளரது பிரச்னைகளை அறியமுடிந்ததென்றும் அவர் கருத்துத் தெரிவித்தார். (கி)

கடந்த ஆண்டு

## தென்னபிரிக்காவில் 112 சிறை மரணங்கள்

கேப்ரவுண், பெப் 13

கடந்த 82-ல் தென்னபிரிக்காவின் பொலிஸ் சிறைக்கூடங்களில் 112 தென்னபிரிக்கக் கைதிகள் மரணமடைந்துள்ளனர்.

இத்தகவலை தென்னபிரிக்க சட்ட அமைச்சரான லூயிஸ் லி கிரெஞ்ச் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் கேட்ட கேள்வியொன்றுக்கே மேற்கண்டவாறு அவர் கூறினர்.

சட்ட அமைச்சர்வெளியிட்ட அறிக்கையில் மேலும், 1981-ல் இம்மரணங்கள் 113 என்றும், 80-ல் 105 என்றும், 79-ல் 99 ஆகவும் இருந்து வந்துள்ளது அறியப்பட்டது.

இயற்கைக் காரணங்களினலும், தற்கொலைகளினலுமே இவ்வளவு தொகையில் மரணங்கள் சம்பவித்தன என்று காரணம் காட்டப்பட்டது. (கி)

## இலங்கை வெளிநாட்டு கொள்கைக்கு பாராட்டு

மாஸ்கோ, பெப்,13

''சோவியத்—இலங்கை நட்புறவுக் கழகத்தின் உஸ்பெக் பிரிவு 25 ஸ்தாபனங்களைத் தன்னுள் கொண்டிருக்கிறது. இவை அனைத்தும் ஆண்டு நிறைவுக் கூட்டங்களையும் உரைகள், கருத்தரங்குகளையும் ஒழிய, புகைப்படக் கண்காட்சிகளையும் நடத்துகின்றன இலங்கை பற்றியும், சோவியத்-இலங்கை நட்புறவு பற்றியும் திரைப்படங்களைக் காட்டுகின்றன'' என்று சோவியத்-இலங்கை நட்புறவு கழகத்தின் உஸ்பெக் பிரிவைச் சார்ந்த திரு. அன்ன காலிதோவா, மாஸ்கோ நட்புறவு மாளிகையில் நடைபெற்ற கருத்தரங்கில் குறிப்பிட்டார்.

''எங்கள் உதவியுடன் இலங்கையில் நடைபெற்ற உஸ்பெக் கைவேலைக் கண்காட்சி, பெரும் வெற்றியடைந்தது. உஸ்பெக் குடியரசில் சோவியத்- இலங்கை நட்புறவுக் கழகத்தின் பிரிவினதும் அதன் ஸ்தாபனங்களினதும் நடவடிக்கைகளையும் சோவியத்- இலங்கை நட்புறவு சம்பந்தப்பட்ட பிரச்னைகளையும் ஆராயும் முகமாக இந்தக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டது'' என்றும் அவர் தெரிவித்தார்.

சோவியத் வெளிநாட்டமைச்சின் அதிகாரியான திரு. அன்ரிட் ஃபெயல் கோழ்ஜ்கி தமது உரையில் இலங்கைகடைப் பிடிக்கும் வெளிநாட்டுக் கொள்கையின்சமாதானத் தன்மையையும் அதன் ஏகாதிபத்திய- விரோத, காலனியாதிக்க விரோதப் போக்கையும், கூட்டுச்சேராக் கோட்பாடுகளின் மீதான அதன் விசுவாசத்தையும் சுட்டிக்காட்டினர்.

''சோவியத் யூனியனிற் கல்வி பயிலும் இலங்கைமாணவர்கள், இரு நாடுகளினதும் நட்புறவுக் கழகங்களுடன் தீவிரமாக ஒத்துழைக்கின்றனர்'' என்று, பட்ரிஸ் லுமும்பா பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் வலரி மிட்ரோஃபானோவ் தெரிவித்தார்.

''தற்போது சோவியத் கல்வி நிலையங்களில், 460 மாணவர்களும், பட்டதாரிப்

(6-ம் பக்கம் பார்க்க)

## இந்திய கிரிக்கெட் அணியின் சுற்றுப்பயணம் ஆரம்பம்

### கபில்தேவ் தலைமை தாங்குகிறர்!

புதுடில்லி, பெப். 13

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் குழு எதிர்வரும் வியாழக்கிழமை தனது மேற்கிந்தியப் பயணத்தை மேற்கொள்கிறது. இந்த அணி தனது முதலாவது டெஸ்ட் பந்தயத்தை எதிர்வரும் 23-ம் திகதி கிங்ஸ்டனில் ஆரம்பிக்கும்.

இந்திய அணிக்குச் சகல துறைகளிலும் சிறந்தவரான வீரர் கபில்தேவ் தலைமை தாங்குகிறர். இவரே இந்திய அணியை வழிநடத்தும் வயதில் குறைந்த முதலாவது காப்டன் ஆவார். இவருக்கு வயது 24.

இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளில் பரவலாகப் பந்தயங்களை ஆடவுள்ளது. இந்திய அணியை வழியனுப்பி வைக்கும் வைபவம் புதுடில்லியில் இடம்பெற்றது. அப்போது முன்னள் காப்டன் சுனில் கவாஸ்கர் எதிர்வரும் 18-ம் திகதியே இந்திய அணியுடன் சேர்ந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## இலங்கை ஆய்வுகள் குறித்து சோவியத் அறிஞர்கள்மாநாடு

மாஸ்கோ, பெப்,13

சோவியத் விஞ்ஞானப் பேரவையின் கீழைத்தேச ஆய்வுக் கழகம், இலங்கைபற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள அறிஞர்களது 4வது அனைத்து யூனியன் மாநாட்டை நடாத்தியது.

இலங்கையின் 35 வது சுதந்திர தினத்தை ஒட்டி இம்மகாநாடு நடைபெற்றன. முதலாவது மகாநாடு 1972லும் பின்னர் 1974, 1975ம் ஆண்டுகளிலும் நடைபெற்றன.

பிரபல கீழைத்தேச ஆய்வாளரும் இந்திய மத்திய ஆசியப் பிரிவின் தலைவருமான கிரிகோரி கொடொஸ்கி, இரு நாடுகளுக்கும் மக்களுக்கும் இடையிலான நட்புறவும், சகல ஒத்துழைப்புக்களும் உறுதியான அடித்தளத்தில் வளர்ந்து வருகின்றன என்று கூறினர்.

கடந்த 35 ஆண்டுகால சுதந்திர வளர்ச்சியின் இலங்கை ஏற்படுத்திய சாதனைகளை அவர் தொகுத்துக் கூறினர்.

இலங்கையின் புராதன, இன்றைய வரலாறு குறித்தும் இலக்கியம், கலை, பொருளாதாரம், சமூகம் ஆகியவற்றின் பல்வேறு அம்சங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

பிரபல சோவியத் அறிஞர்களான வை. வாஜ்லொவ், ஏ. ரொமனேவ் ஆகியோர் எழுதிய ''சுதந்திர ஆட்சிக் காலத்தில் இலங்கைப் பொருளாதார வளர்ச்சியின் பலாபலன்கள்'' என்ற அறிக்கையும் ''இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் வெளிநாட்டுதவியின் பாத்திரம்'' என்ற அறிக்கையும் இங்கு பலரது கவனத்தையும் ஈர்த்தன.

இலங்கையின் நவீன அரசியல், சமூகவளர்ச்சிப் பிரச்னைகள் குறித்து இ. தல்முட், எஸ். ட்ரொய்ட்ஸ்கி, கே. தனிதோப் மற்றும் பல அறிஞர்களும் உரையாற்றினர்.

இந்து சமுத்திரத்தை சமாதானப் பிராந்தியமாக்கும் இலங்கையின் போராட்டம் குறித்து எம். ஸடேரேவா, ஐ. சுச்கோல் ஆகியோர் கூட்டாக எழுதிய கட்டுரைகளும் பெரும் கவனத்தைப் பெற்றன, சமாதானப் பணியில் இலங்கையின் பங்களிப்புக் குறித்து சோவியத் அறிஞர்கள் சுட்டிக் காட்டினர்.

மாஸ்கோ, லெனின்கிராட், யாரொஸ்லாவ்ஸ் ஆகிய இடங்களிலிருந்து 16 அறிஞர்கள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

## ''எண்ணெய் விலை குறைப்பு 'ஒபெக்' ஸ்தாபனத்தைப் பாழாக்கும்!''

திரிப்பொலி, பெ. 13

'ஒபெக்' அங்கத்துவநாடுகள் எண்ணெய்விலைக் குறைப்புக்கு முன்வந்திருப்பது, 'ஒபெக்' அமைப்பையே பாதிப்பதாக இருக்கின்றது' என்று லிபியா எச்சரித்துள்ளது.

லிபியா விடுத்துள்ள எச்சரிக்கையில் மேலும் எண்ணெய் உற்பத்தி நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களை குழப்பி, அந்நாடுகளின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் விதத்தில் ஏகாதிபத்திய நாடுகள் நடந்துகொள்ளும் முறையே 'ஒபெக்' நாடுகளை எண்ணெய் விலை குறைப்புக்கு இட்டுச் செல்ல வழிவகுத்துள்ளது

எனவே எண்ணெய் விலைக் குறைப்பினைமிகஅவதானமான முறையில் பரிசிலிக்கவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவுதிஅரேபிய இளவரசரும், அந்நாட்டின் எண்ணெய்த்துறை அமைச்சருமான ஷேக் ஜமானி 'ஒபெக்' நாடுகளின் கடைசிக் கூட்டத்தில் ஒரு பீப்பாய் எண்ணெயின் விலை 34 டாலரிலிருந்து 30 டாலராகக் குறைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே! (கி)

### மணிவாக்கு

அநியாயமாகக் கிடைத்த திரவியத்தைச் சிலர் தானம் செய்வார்கள், அவர்கள் ஒரு நல்ல பயனை யும் அடையமாட்டார்கள். கபட எண்ணத்துடன் தானம் செய்பவனும், வீண் பெருமைக்காகவே தானம் செய்பவனும் முடிவில் கெட்ட கதியை அடைவார்கள்.

—ராஜாஜி

# நமது நோக்கு

## சட்ட ஆட்சி

நாம் மீண்டும் சட்ட ஆட்சி பற்றிச் சிந்திக்க அண்மையில் உயர்நீதி மன்றம் மனித உரிமை மீறல் பற்றிய வழக்கில் வழங்கிய தீர்ப்பு காரணமாகிறது.

அரசியல் அமைப்பின் அத்தியாயம் 14 (1) 9 குறிக்கும் எழுத்துச் சுதந்திரம், வெளியீட்டுச் சுதந்திரம் மீறப்பட்டதாக உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஐந்து நீதியரசர்கள் துண்டுப்பிரசுரங்களைப் பறிமுதல்செய்த கம்பகா பொலிஸ் சுப்பிரிண்டன்ட் பி. உடுகம்பொல மனுதாருக்கு நஷ்டஈடாக 10,000 ரூபாவும் செலவுத் தொகையாக 2,100 ரூபாவும் செலுத்தும்படி ஏகமனதாக உத்தரவிட்டுள்ளனர்; உரிமை மீறப்பட்டது அவர்களின் உறுதியானகருத்து. பௌத்த, கிறீத்துவ மத குருமாரின் குழு ஒன்று அரசாங்கம் நடத்தும் சர்வஜன வாக்கெடுப்பு இலங்கை அரசியல் சாசனம் உறுதிப்படுத்திய மனித அடிப்படை உரிமைக்கு மாறானதென்று வெளியிட்ட துண்டுப் பிரசுரமே பொலிசாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

அவசரகாலச் சட்டத்தின் படியும் தேர்தல் சட்டத்தின் படியும் இவ்விதபிரசுரம் சட்டவிரோதமானதென்று கம்பகா எஸ். பி. 20,000 பிரதிகளைப் பறிமுதல் செய்தார்.

ஐந்து உயர்நீதியரசர்கள் ஏகமனதாக வழங்கிய தீர்ப்பு மக்கள் கவனத்துக்குரியது. காரணம், பொலிஸ் பறிமுதல் செய்தது சட்டவிரோதமானதென்பது மட்டுமல்ல: அவசரகாலச் சட்டத்தை அடிப்படையாக வைத்து அரசாங்கத்தின் வலது கையான பொலிஸ் பல சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுவது இத்தீர்ப்பால் மறைமுகமாக நிரூபிக்கப்படுகிறது.

அடிப்படை மனிதஉரிமைகளை உறுதி பண்ணிய அரசின் அதிகாரிகளேஅவற்றை மீறுவார்களானால் — வேலி பயிரை மேய்ந்தால் — கேட்பவர் யார்?

நீதிமன்றம் என்றதெய்வம் என்பது விடை. கொழும்பு உயர்நீதிமன்றம் நீதி வழங்கியது; மக்களுக்கு மட்டுமல்லாமல் அரசுக்குமே இன்னொரு வகையில் பெருமையளிக்கிறது. நீதிமன்றம் அரசுக்கெதிராகவே நீதிவழங்குகிறது என்பது அரசின் பெருமை.

அடுத்த கேள்வி என்ன? சாதாரண பிரஜை ஒவ்வொருவருக்கும் உயர்நீதிமன்றம் சென்று அநீதி பற்றி முறையிடும் வாய்ப்புண்டா? இல்லை. பல்லாயிரக்கணக்கான மக்கள் பொலிசாரின் சட்டத்தையே, அவர்கள் செயலையே முடிந்த முடிபாகக் கொள்ளும நிர்ட்பந்தம் நிலவுகிறது.

மக்கள் ஆட்சியின் அடிப்படை அம்சங்களில் சட்ட ஆட்சி பிரதானமானதொன்று. சட்ட ஆட்சி மனித ஆட்சி அல்ல வென்று விளக்கியவர் கிரேக்க மாமேதை அரிஸ்டொட்டில் (Aristotle), சட்டம் என்பது மனித விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட பகுத்தறிவு. மனிதன் இயல்பாகவே உணர்ச்சிவசப்பட்டவன். ஐந்து அரசாட்சி நடத்தும் தலைவர்களும் மனிதர்களே! தலைவரின் அதிகாரம் தலைக்கேறுமற் தடுப்பது சட்டம்; இவ்வித சட்ட ஆட்சிக்கு அரசின் எதிரிகள் பலியாகாமற் தடுக்கவல்ல நிறுவனமே நீதிமன்றம்.

சட்ட ஆட்சிக்கு அரசு கட்டுப்பட்டது. அவ்வாறு கட்டுப்பட்ட ஆட்சியே செங்கோல் ஆட்சியெனப்படும். செங்கோல் என்று சொல்லப்படும்போது கொடுங்கோலுக்கும் போதிய இடமுண்டென்பது அர்த்தம்.

கொடுங்கோலைக் கண்டித்து அதனை நீக்குவதற்குச் சட்ட ஆட்சி பயன்படுகின்றது. இவ்வாறு கூறுவதால் நாட்டின் அரசு சட்டத்தின் அடிமையென்பதல்ல. அடிப்படை உரிமைகள் உட்பட சட்டக்கோவை முற்றாக பிரஜைகளின் மேம்பாட்டுக்காக உருவாக்கப்படுகிறது.

எனவே ஒவ்வொரு பிரஜையும் தன்னுடைய சம்மதத்தால் உருவான சட்டத்தை மதித்து வாழும் பொறுப்புடையவன்; ஆனால் பிரஜையின் சம்மதம் அவனுடைய பிரதிநிதியில் பொறுப்பிக்கப் படுகிறது. இந்தப் பொறுப்பு அரசியல் மாயஜாலத்தில் ஆணவமுடைய பெரும்பான்மைக் கட்சி அதிகாரத்தால் நிலைகுலைந்து அரசின் பொறுப்பாக மாறநேரிடும். அவ்வேளையில் அசாதாரண காரணங்களை முன்வைத்து அரசு தன்னுடைய பாதுகாப்புக்கு — மக்கள் பாதுகாப்புக்கு அல்ல — ரகசிய, அவசரகால நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நாம் அனுபவத்தில் காண்கின்றோம்.

இந்த நிலையில் அதிகார ஆட்சி வலுப்பெறுகின்றது. நிர்வாக நடவடிக்கைகள் வீறுகொள்ளும்போது அரசின் காவலர 'மண் விண்' தெரியாத வேகத்தில் பொதுமக்களை அவசியமற்ற சட்டவிரோதமான நடவடிக்கைகளுக்கு உட்படுத்துகின்றனர். இது கண்கூடு.

பொலிசாரைப் பொறுத்தளவில் நாளுக்குநாள் குவியும் விதம் விதமான, விநோதமான சட்டங்களின் அர்த்தங்களை, பொலிசார் உணர்ந்தவரல்லர். எனவே ஒரு சிறு சந்தேகத்தில் எவரையும் கைதுசெய்ய, எதனையும் பறிமுதல் செய்ய, எந்த வீட்டுக்குள்ளும் எந்நேரமும் சென்று தேடுதல் போடத் தயங்கமாட்டார்கள்.

சட்டம் மறுக்கப்பட்ட, உரிமை பறிக்கப்பட்ட பிரஜைகள் எல்லோரும் பொலிசாரை எதிர்த்து நீதிமன்றம் செல்லும் வசதியுடையவரா?

இல்லையென்றால் சட்ட ஆட்சியில் என்ன அர்த்தமுண்டு?

பொலிசாருக்கு இவ்விடயத்தில் போதிய அறிவும் அனுபவமும் முக்கியமானதென்பதை இந்த வழக்கு நிரூபிக்கின்றது. பொதுமக்கள் விழிப்பே ஜனநாயக ஆட்சியின் ஆணிவேர் என்பது மற்றைய பிரதான கருத்தாகும். சப்பாத்தணிபவனுக்கே அது எங்கே காலை வெட்டுகிறதென்பது தெரியும். இந்த உவமையைக் காட்டிச் சட்டத்தின் நிட்பநுட்பம் பிரஜையின் பொறுப்பு என்று விளக்கப்பட்டிருக்கிறது.

இன்று அமுலில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் பொதுசனப் பாதுகாப்புக்கு என்று உருவாக்கப்பட்டதாக அரசு கருதுகின்றது.

நாம் அதனை ஆட்சேபிக்காவிட்டாலும், அரசின் நோக்கம் ஒன்றாயிருக்க, விதி இன்னொன்றை நினைத்தவாறு, கணக்கற்ற அட்டூழியங்கள் அச்சட்டத்தின் பேரில் நடைபெறுவதை நாம் காண்கின்றோம்.

பயங்கரவாதத்தை அடக்க அரசு நிச்சயம் இச்சட்டத்தை மாற்றி வேறு வழிகையாளுவதே உத்தமமானதும் உசிதமானதும்.

# “கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டாலே அரசுடன் பேச்சுவார்த்தைக்கு நாம் உடன்படுவோம்”

**- அமிர்**

(மாவிட்டபுரம்)

‘ஏப்ரல் மாதம் நடைபெறும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் மாநில மகாநாட்டில் பலவேறு விடயங்கள் பற்றியும் ஆராயப்படும். ஏற்கனவே நாம் கொண்டுள்ள இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லும் வழிவகைகள் பற்றியே அம்மாநாட்டில் ஆராயப்படும். தமிழ் ஈழ விடுதலை பற்றிய தீர்மானத்தில் எதுவித மாற்றமும் செய்யப்படமாட்டாது.’

இவ்வாறு எதிர்க்கட்சி முதல்வரும், காங்கேசன்துறைப் பிரதிநிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் பழை—வீமன்காமம் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை புனரமைப்புக் கூட்டத்தில் கலந்துஉரையாற்றுகையில் கூறினர்.

வீமன்காமம் காந்தி சேவா சனசமூகநிலைய மண்டபத்தில் மாவை சேனதிராஜா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது!

‘இன்று அரசாங்கம் பலம் வாய்ந்ததாக இருப்பதால் எமது அமைப்பும் பலம்வாய்ந்ததாக இருக்கவேண்டும். பேச்சுவார்த்தை மூலமோ, அல்லது போராட்டம் மூலமாகவோ எமது பிரச்னைகளை வென்றெடுக்க எமது அமைப்பு பலம்வாய்ந்ததாக இருக்க வேண்டும்.

‘அமைப்பின் பலம் அதன் கிளைகளிலேயே தங்கியுள்ளது. கிளைகள் சிறப்பாக இயங்கி தலைமையின்கீழ் கட்டுப்பாடாகச் செயல்படவேண்டும். இளைஞர்கள் தீவிரவாதம், அதிதீவிரவாதம் என்று பிளவுபடாமல் ஒற்றுமையாக ஓர் அணியின்கீழ் செயல்பட வேண்டும்.

‘சிங்கள எதிர்க்கட்சிகளை சிதறடித்த அரசாங்கம் எங்களது இயக்கத்தையும் சிதறடிக்க முனைந்தபோதும் அது முடியாமல் போகவே பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. பேச்சுவார்த்தைமூலம் எல்லைப்புறப் பிரச்னைகள், வன்செயல் நஷ்டஈடு போன்றவற்றுக்குத் தீர்வுகளைக் கண்டோம். மேலும் நாம் விடுத்த கோரிக்கைகள் சில இன்னமும் அரசால் நிறைவேற்றப்படவில்லை. அவை நிறைவேற்றப்பட்டாலே மீண்டும் அரசுடன் பேச்சுவார்த்தைக்கு உடன்படுவோம். அரசாங்கம் சமாதானத்தை விரும்பினல் இவற்றையும் தீர்த்துவைக்க முன்வரவேண்டும்.

‘அரசாங்கம் இன்றைய உள் விவகாரங்களில் ஈடுபட்டுள்ளது. ஜனதிபதி அரசாங்கத்தின் பலத்தைத் தன் கையில் வைத்திருப்பதற்காகத் தமது பலத்தை அதிகரிப்பதில் ஈடுபட்டிருக்கிறர். இதன்பின்பே எமது பிரச்னைகளை அணுக முற்படுவார். அப்போது நாம் பலமான அமைப்பாக இருந்து எமது பிரச்னைகளை தீர்ப்பதற்கு வழிகாணவேண்டும்.

‘மாவட்ட அமைச்சர் பதவி பற்றிப் பெரிதாகப் பேசப்படுகிறது. ஆனல் அதுபற்றி நாம் எவ்வித முடிவும் எடுக்கவில்லை.

‘மாவட்ட அபிவிருத்தி சபைகளைப் பூரணமாகச் செயற்படுத்துவதற்கு மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்பது அவசியமா? என்பது பற்றி நாம் ஆராய்ந்து முடிவெடுப்போம்’ என்ருர்.

# மன்னர் செய்திகள்

எஸ். தர்மகுலசிங்கம்

மன்னர் மாவட்டத்தைச் சேர்ந்த இரணை இலுப்பைக்குளம், விளாத்திக்குளம்ஆகிய பகுதிகளுக்கென தனியானதொரு விவசாய சேவை நிலையம் அமைக்கப்படும், இதற்கான நடவடிக்கைகளை மன்னர் அரசாங்க அதிபர் மேற்கொண்டு வருகிருர்,

இரணை இலுப்பைக்குளம் விளாத்திக்குளம் ஆகிய இரு பகுதிகளும் தற்போது காக்கைகுளம் விவசாய சேவை நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன:

### குடும்பத்திட்ட தொண்டர்கள்

மன்னர் — சின்னப்பண்டிவிரிச்சான் குடியேற்றத் திட்டத்தில் குடும்பத் திட்டவேலைகளை மேற்கொள்வதற்கு உதவியாக 30 தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சின்னப்பண்டிவிரிச்சான் குடும்பத்திட்டச் சங்கத்தின் அங்கத்தவர்களே தொண்டர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு இம்மாதம் 12-ம் திகதி முதல் 3 நாட்களுக்கு பயிற்சியளிக்கப்படும்.

### உபஉணவு உற்பத்தி

மன்னர் மாவட்டத்தில் உப உணவு உற்பத்தியைமேற்கொள்வதற்கு வேண்டிய நீர் வளமும், நிலவளமும் இருப்பதால் மன்னர் மாவட்ட விவசாயிகள் நெற் செய்கையை மட்டும் மேற்கொள்ளாது உப உணவு உற்பத்தியிலும் தீவிரமாக ஈடுபடவேண்டும், என்று மன்னர் மாவட்டத்திற்கு விஜயம் செய்த விவசாயப் பணிப்பாளர் கலாநிதி வோல்ட்டர் பெர்ணண்டோ தெரிவித்தார். இவருடன் விவசாயப் பிரதிப் பணிப்பாளர்களான திரு. எஸ்: ஆர், அரசலிங்கம், திரு எஸ். நடேசன், திரு. பேர்சி அபேவர்த்தன, திரு. எஸ். டபிள்யூ. லூயிஸ், திரு. ரணவீர, திரு. சார்ள்ஸ் ஆகியோரும் மன்னர் மாவட்டத்திற்கு விஜயம் செய்தனர்,

### இளைஞர் பயிற்சி பாசறை

முருங்கன் ஜீவோதயம் விவசாயப் பண்ணையில் இளைஞர் பயிற்சி பாசறை ஒன்று நடத்தப் பட்டது.

இப்பயிற்சிப் பாசறையில் இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள கிறிஸ்தவ வாலிபர் சங்கங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சிப் பாசறையில் கலந்து கொண்ட இளைஞர்களுக்கு மன்னர் எம். பி திரு. எஸ். சூசைதாசன் சான்றிதழ்களை வழங்கினர்.

### அவுஸ்திரேலியா பயணம்

மன்னர் அரசாங்க அதிபர் திரு. ஏ. ஜே செந்தில்நாதன் அரசின் புலமைப் பரிசில் பெற்று அவுஸ்திரேலியாவுக்கு பயணமானர்.

இவர் அவுஸ்திரேலியாவில் 10 வாரங்கள் தங்கியிருந்து பொது நிர்வாகம் தொடர்பான பயிற்சியைப் பெறுவார்.

வெளிநாடு சென்றுள்ள மன்னர் அரசாங்க அதிபர் நாடு திரும்பும்வரை வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி லோகேஸ்வரன் மன்னர் அரசாங்க அதிபராகவும் கடமையாற்றுவார்

### சந்தேக நபர் இருவர் கைது

பேசாலையில் உள்ள வீடு ஒன்றில் கடந்த வாரம் இடம்பெற்ற 50,730 ரூபா பெறுமதியான நகைகள் திருட்டுத்தொடர்பான இரு சந்தேகநபர்கள் பொலிசாரினல் கைதுசெய்யப்பட்டனர்.

பேசாலையிலுள்ள செவத்தியான் குரூஸ் என்பவர் வீட்டில் இத்திருட்டுநடைபெற்றது

### இளைஞர் தற்கொலை

மன்னர் இலுப்பைக்கடவை வர்த்தக நிலையமொன்றில் சிப்பந்தியாகக் கடமையாற்றிய இளைஞர் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். வவுனியா பூமான்குளத்தைச் சேர்ந்த ஞ. சுந்தரம் [வயது 27] என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்;

காதலித்தபெண் திருமணம் செய்ய மறுத்ததாலேயே விரக்தியடைந்து தற்கொலை செய்தாரென மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி ஜனப் எம். எம். ஆலிம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

### ஆஸ்பத்திரியில் தற்கொலை

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மகனைப்பார்க்கச் சென்ற 7பிள்ளைகளின் தந்தை மனைவி முன்னிலையில் ஆஸ்பத்திரியில் வைத்தே கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

தலைமன்னர் துறைமுகப்பகுதியைச் சேர்ந்த பி. கறுப்பையா [வயது 44] என்பவரே மரணமானவராவார்.

மரணமானவர் காச நோயினல் பீடிக்கப்பட்டிருந்தார். என்றும் இவரது இருபிள்ளைகள் காசநோயினல் பீடிக்கப்பட்டு ஏற்கனவே மரணமானர்கள் என்றும் இவரது மற்றமொரு பிள்ளை காசநோயினல் பீடிக்

[5-ம் பக்கம் பார்க்க]

### தங்கப்பதக்கத்தில் பொலிஸ் அதிகாரி

# சிவாஜி, கொள்ளையுடன் தொடர்புள்ள தமது மகனையே சுட்டுக் கொல்கிறார்

## நீர்வேலி வழக்கில் ஏ. எஸ். பி. சாட்சியம்

(இ. கந்தசாமி)

இந்த நாட்டின் அரசியல் அமைப்புக்கு விசுவாசமாக இருப்பேன் என உறுதிமொழி எடுத்துள்ளேன். அந்த உறுதி மொழிக்கமைய இந்நாட்டில் உள்ள மக்கள் வங்கிகளைக் கொள்ளையடிக்கவோ பொலிஸ் அதிகாரிகளைச் சுட்டுக் கொலை செய்யவோ மாட்டேன். பொலிஸ் அதிகாரி என்ற ரீதியில் இந்நாட்டின் மக்களையும் உடைமைகளையும் பாதுகாப்பேன்.

இந்த நாட்டின் அரசியல் அமைப்புக்கு விசுவாசமாக இருப்பதாக இந்த நீதிமன்றத்தில் கடமையாற்றும் நீதிபதிகளும் சட்டத்தரணிகளும் சத்தியப் பிரமாணம் எடுத்து அதற்கமையவே பணியாற்றுகிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

நீர்வேலி வங்கிக் கொள்ளை, இரட்டைக் கொலை வழக்கில் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதிபதி சி. எல். ரி. மூனமல முன்னிலையில் நடைபெற்று வரும் தனியான விசாரணையில் சாட்சியமளித்த ஏ. எஸ். பி பத்மநாதன் கனகசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

எதிரிகள் தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி என். சத்தியேந்திரா தமது குறுக்கு விசாரணையை முடித்துக்கொண்டதை அடுத்து பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சுனில் டி. சில்வா சாட்சியை மீள்விசாரணை செய்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கனகசிங்கம் மேலும் கூறியதாவது:-

பொலிஸ் அதிகாரி என்ற வகையில் நான் தமிழ்மக்களின் புகார்களைப் பதிவுசெய்வதற்கு ஒரு புத்தகமும், சிங்கள மக்களின் புகார்களைப் பதிவுசெய்வதற்கு இன்னுமொரு புத்தகமும் வைத்திருப்பதில்லை. ஒரே புத்தகத்திலேயே சகல மக்களினது புகார்களையும் பதிவுசெய்வேன். விசாரணை செய்யும் போதும் தமிழர்களை ஒருவிதமாகவும் சிங்களவர்களை ஒரு விதமாகவும் நான் விசாரிப்பதில்லை. குற்றவாளி எவராக இருந்தாலும் குற்றவாளிதான்.

பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சுனில் டி சில்வா கீழ்க்கண்ட கேள்விகளைக்கேட்டார்.

நடிகர் திலகம் சிவாஜி கதாநாயகனாக நடித்து சில வருடங்களுக்கு முன் இலங்கையில் திரையிடப்பட்ட "தங்கப் பதக்கம்" படத்தில் யாருக்காவது தங்கப் பதக்கம் கொடுக்கப்பட்டதா? ஏன் கொடுக்கப்பட்டது? தங்கப் பதக்கம் என்றால் என்ன?

எதிரி தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணியான சத்தியேந்திரா தமது குறுக்கு விசாரணையின்போது திரு. கனகசிங்கத்தைப் பார்த்து 'தங்கப் பதக்கம்' படம் பார்த்தீரா? அதில் சிவாஜியின் நடிப்பைப் பார்த்தீரா? கேட்டுக்கொண்ட கேள்விகளின் அடிப்படையிலேயே திரு. சில்வாவும் மேற்சொன்னவாறு கேட்டார்.

அக்கேள்விகளும் பதிலும் வருமாறு:-

சுனில்: "தங்கப் பதக்கம்" படம் பார்த்தீரா? என்று உம்மிடம் கேட்கப்பட்டதே, பார்த்தீரா?

கனகசிங்கம்: ஆம்.

சுனில்: "தங்கப் பதக்கம்" என்றால் என்ன?

கனக: தங்கத்தால் செய்யப்பட்ட 'மெடல்'.

சுனில்; அந்தப் படத்தில் எவருக்கும் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டதா? எதனால் அப்படத்திற்கு அப்பெயர் இடப்பட்டது?

கனக: அப்படத்தின் கதாநாயகன் ஒரு பொலிஸ் அதிகாரி. சிவாஜி கணேசன் அப்படத்தில் பொலிஸ் அதிகாரியாக நடித்தார்.

சுனில்: அப்படத்தின் கதாநாயகன் ஏதாவது குற்றவியல் நடவடிக்கைகள் குறித்து விசாரித்தாரா?

கனக: அந்தப் பொலிஸ் அதிகாரி தமதுமகன் தொடர்பு கொண்டுள்ள கொள்ளை பற்றி விசாரணை நடத்தி அவ்விசாரணையின்போது தமது மகனையே சுட்டுக்கொல்கிறார்.

சுனில்: பொலிஸ் அதிகாரிகள் தமது கடமையைச் செய்யும்போது தமக்கு என்ன தான் சோதனை ஏற்பட்டாலும் தமது கடமையிலிருந்து தவறாது அதனைச் சரிவரச் செய்யவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறீரா?

கனக: ஆம் ஏற்றுக்கொள்கிறேன். (இ)

---

### சமாதானபோதகர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

இனங்களுக்கிடையேயும், மக்களுக்கிடையேயும் சமாதானக் கருத்துக்களை பரப்புவதற்காக அமெரிக்காவைச் சேர்ந்த சமாதானப் போதகர் திரு. வில்லியம் மக்லின் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

உலகின் பலநாடுகளுக்கும் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு வரும் வழியில் இலங்கைக்கும் விஜயம் செய்தார்.

அவ்வழிப் போராட்டக்குழுவின் செயலாளரும் இலங்கைப் பிரதிநிதியுமான திரு. ஜீவகதாஸ், திரு. மக்லினின் இலங்கை விஜயத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

நேற்று முன்தினம் காலை முன்னாள் விரிவுரையாளர் கு. நேசையா இல்லத்தில் திரு. மக்லின் பத்திரிகையாளர் மகாநாடொன்றைக் கூட்டி தமது சமாதானக் கொள்கைகளுக்கு விளக்கினார்.

இம் மாதம் 14ம் திகதி கொழும்பு வை. எம். சி. யில் உரைநிகழ்த்தும் திரு வில்லியம் மக்லின் 15ம் திகதி இந்தியா புறப்படுவார். [மா]

---

### கார்ஓட்டிப்பழகும் ஆசை வாலிபர் உயிருக்குளமனது

(மட்டுவில்)

மோட்டார் கார் ஓட்டிப் பழகுவதற்காக, தான் கராஜ் ஒன்றிலிருந்து, திருத்தத்திற்காக வந்திருந்த கார் ஒன்றை எடுத்து ஓட்டிப் பழகினார் அங்கு வேலைசெய்யும் ஓர் வாலிபர். காரில் சிறிது காயம் ஏற்படவே அதற்குப் பதில் சொல்லப் பயந்து, நச்சுத் திராவகம் அருந்தி உயிரையே மாய்த்தார் அந்த வாலிபர்.

இப் பரிதாப சம்பவம், சாவகச்சேரி வடக்கு கிராம்புவில் என்ற இடத்தில் நடைபெற்றது. பி பாலசிங்கம் (18 வயது) என்ற இவ் வாலிபரின் மரணம் சம்பந்தமாகச் சாவகச்சேரிப் பகுதித் திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் விசாரணை நடத்தினார். இறந்தவரின் தாயார், தந்தை, கராஜ் உரிமையாளர் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இறந்தவர் கராஜ் ஒன்றில் வேலைபார்த்து வந்தார் அவருக்கு கார் ஓட்டிப் பழகுவதில் ஆசை ஏற்பட்டது. கராஜில் திருத்தத்திற்காக வந்த ஒரு காரை எடுத்து ஓட்டிப் பழகினார். அதில் சிறுது காயம் ஏற்பட்டுவிட்டது. கார் உரிமையாளருக்கோ, கராஜ் உரிமையாளருக்கோ எப்படி பதில் சொல்வது என்று தெரியாத நிலையில் இரண்டு மூன்று தினங்கள் வேலைக்குப் போகவில்லை. பின்னர் தாயிடம் போய் குகினிக்குள் ஒரு கத்தியை வாங்கிக் கிருமிநாசினிப் போத்தலின் மூடியை அக்கத்தியால் உடைத்துக் குடித்தார். பின்னர்தான் கிருமிநாசினி குடித்துவிட்டதாகக் கூறியபடி வீதியில் ஓடத் தொடங்கினார். அவரை வீட்டார் துரத்திப்பிடித்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றனர். அங்கு அவர் மரணமானார்.

சாட்சிகள் இவ்வாறு தெரிவித்தனர். சாட்சியங்களைப் பதிவுசெய்துகொண்ட திடீர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (அ)

---

### போதனாசிரியரைச் சந்திக்க

## விவசாயிகள் 17 மைல் செல்லவேண்டுமாம்!

(புலோலி)

கொம்மாந்துறை கிராம அபிவிருத்திசங்கம் விவசாயிகளின் நன்மை கருதி விவசாயக் கருத்தரங்கொன்றை சங்கத்தலைவர் திரு. ஆர். ஜெயகுணரத்தினம் தலைமையில் நடாத்தியது.

இக்கருத்தரங்கில் யாழ். உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ். ஜெயரத்தினம், விவசாய உத்தியோகத்தர்களான திரு. பரமானந்தம், திரு. மகேஸ்வரன், மேட்டுப்பயிர்ச் செய்கை விவசாயப் போதனாசிரியர் திரு. கயிலைநாதன், அம்பன் விவசாயப் போதனாசிரியை திருமதி தனவதி கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

விவசாயிகள் தங்கள் விவசாயப் போதனாசிரியரைச் சந்திப்பதற்காக 17 மைல்கள் இரண்டு பஸ் வண்டிகளில் செல்ல வேண்டியிருப்பதாகவும் இதனால் தாம் பெரும் பாதிப்படைந்து வருவதாகவும் எனவே தங்கள் பகுதியில் விவசாயப் போதனாசிரியர் அலுவலகமொன்றை அமைத்துத்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (க)

---

### விஸ்வமடு றெட்பானாதிட்டகொலை:

## பிணையில் செல்வதற்கு எதிரி அனுமதிக்கப்பட்டார்

[வவுனியா]

முல்லைத்தீவு நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வரும் விஸ்வமடு 'றெட்பானா' திட்டத்தைச் சேர்ந்த காத்தமுத்து சக்திவேல் கொலை வழக்கில் எதிரியான தங்கவேலு ராஜேந்திரன் ஐயாயிரம் ரூபா பிணையில் செல்வதற்கு முல்லைத்தீவு நீதிபதிக்கு வவுனியா மேல் நீதிமன்றம் அறிவித்தல் கொடுத்துள்ளது.

எதிரிசார்பில் ஆஜராகிய சட்டத்தரணி கனக. மனோகரன் சமர்ப்பித்த பிணை மனுவை வவுனியா மேல்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு எதிரியைப் பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளது

பிணைமனுவை ஆட்சேபித்து ஒட்டுசுட்டான் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. திசேரா சத்தியக்கடதாசி தாக்கல் செய்திருந்தார்.

மாஜிஸ்ரேட் நீதிமன்ற விசாரணை பெருமளவில் முடிவடைந்துள்ளது என்றும் எதிரிக்கு எதிரான சாட்சியங்கள் முரண்பட்டாயிருப்பதாகவும், இறந்தவர் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரிக்கும், யாழ். சட்டவைத்திய அதிகாரிக்கும் மூன்று நாள் இடைவெளியில் அளித்த வாக்குமூலங்களில் தான் விழுந்துதான் காயமடைந்ததாகத் தெரிவித்துள்ளார் எனவும் எதிரியின் சட்டத்தரணி கனக. மனோகரன் எடுத்துக் கூறியதையடுத்து நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசிர்வாதம் பிணை மனுவை அனுமதித்து உத்தரவு வழங்கினார்.

அரச தரப்பில் அரச சட்டத்தரணி திரு. ஐ. ஞானதாசன் கேட்ட நிபந்தனையை நீதிபதி ஏற்றுக்கொண்டு கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் எதிரி கையொப்பமிடப் பணித்துள்ளார். [அ]

---

### பிரிவுபசார வைபவம்

(புலோலி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகவிருந்து கிளிநொச்சிக்கு இடமாற்றம்பெற்றுள்ள திரு. பீ. கந்தசாமிக்கு தும்பளை தெற்கு கிராம அபிருத்திச் சங்கம் திரு. கே. சின்னத்தம்பி தலைமையில் பிரிவுபசார வைபவமொன்றை சங்க மண்டபத்தில் நடாத்தியது.

இப்பிரிவுபசார வைபவத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி க. நவமணி, கிராமசேவை அலுவலர் திரு. வி. சேதுநாயகம், விசேடசேவை உத்தியோகத்தர்களான திரு. ஆர். புலேந்திரன், திரு. கே. யோகேந்திரநாதன், சங்கச்செயலாளர், திரு. எஸ். சிவபாதம், பொருளாளர் திரு. ஆ. வடிவேலு ஆகியோர் திரு. கந்தசாமியின் சேவையைப் பாராட்டிப் பேசினர். (க)

---

### தம்பிஐயாவுக்கு ஊர்காவற்றுறையில் சிலை!

(வேலணை)

முன்னாள் ஊர்காவற்றுறை எம். பி. அமரர் ஏ. எல். தம்பிஐயா ஊர்காவற்றுறையில் சிலை ஒன்று நிறுவப்படவிருக்கிறது. இத்தகவலைச் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா, ஊர்காவற்றுறைப் பட்டின சபைத் திறந்தவெளியரங்கில் நடந்த அமரர் தம்பிஐயாவின் அஞ்சலிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இச்சிலை இவ்வருடம் இறுதிக்குள் நிறுவப்படும் என்றும் அவர் கூறினார். [க]

---

### மீண்டும் 'உலகத் தமிழர் குரல்'

(வேலணை)

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஏடான 'உலகத் தமிழர் குரல்' அடுத்தமாதம் முதல் வெளிவரவிருக்கின்றது.

இதற்கான ஏற்பாடுகளை ஏட்டின் ஆசிரியரான ஒரும்ப சிட்டி இரா. கனகரத்தினம் சவுதி அரேபியாவிலிருந்து கொண்டே செய்துவருகின்றார்.

---

### இ. த. ஆ. சங்கம் பாராட்டு

[மானிப்பாய்]

சமீபத்தில் 4-ம்தர அதிபர்களாகப் பதவியுயர்வுபெற்று வெளிமாவட்டங்களில் கடமையாற்றக்கேட்கப்பட்ட ஆசிரியர்கள் தமது சொந்தமாவட்டங்களிலேயே கடமையாற்றுவதற்கு ஆவனசெய்வதற்காக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் சங்கக்கிளைகள்மூலம் விபரம் சேகரித்து வருகிறார்.

1978-ம் ஆண்டுப் பரீட்சை எடுத்து ஐந்தாண்டுகள் காத்திருந்தும் வெளிமாவட்டங்களில் சேவையாற்றியோர் பலர் மீண்டும் வெளிமாவட்டங்களுக்கு அதிபர்களாகச் கடமையாற்ற வேண்டிய தேவை ஏற்படமாட்டாதென்றும் பதவியுயர்வுபெற்றோர்கள் தமதுமாவட்டங்களிலேயே அதிபர் வெற்றிடங்கள் இருப்பதால் அங்கேயே கடமை ஆற்றவேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதற்காகவே இவ் விபரங்கள் சேகரிப்பதாகவும் திரு. த. மகாசிவம் குறிப்பிட்டார். [அ]

---

### வட்டு. இந்து அதிபராக இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் திரு. என். வேலுப்பிள்ளை இம்மாதம் தொடக்கம் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி அதிபராக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி அதிபர் திரு. கே. கே. நடராஜா இடமாற்றம்பெற்றுள்ளார்.

---

### மன்னார்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மதுபோதையில் கிருமி நாசினியுடன் வந்த தந்தை இப்பிள்ளையும் காசநோய்க்குப்பலியாகிவிடுவோமோ என்ற அச்சத்தினால் கிருமிநாசினி அருந்தினார் என விசாரணையில் கூறப்பட்டது.

மரணவிசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி ஜனாப் எம். எம். ஆலம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

### அனுமதிப் பத்திரம் பெற்றபின்னரே

# வெளியூர் மீனவரை மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும்

## மட்டக்களப்பு அபி-சபையில்தீர்மானம்

[மட்டக்களப்பு]

''வெளிமாவட்டத்திலிருந்து குறிப்பாக வென்னப்புவ பகுதிகளிலிருந்து வந்து பன்னிச்சங்கேணி, வாகரைப் பகுதிகளில் இறால் பிடிப்பதில் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் பாவிக்கும் 'றமன்' எனப்படும் வலையை இப்பகுதிகளில் பாவிப்பதற்குத் தடை விதிக்க வேண்டும். அத்துடன் வெளிமாவட்டத்திலிருந்து இங்குவரும் மீனவர்களினால் தொழிலில் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு வள்ளத்திற்கும் 100 ரூபா கட்டணம் அறவிடப்பட்டு, உதவி அரசாங்க அதிபரிடம் அனுமதிப் பத்திரம் பெற்ற பின்னரே அப்பகுதியில் தொழில் செய்ய அனுமதிக்கப்படவேண்டும்.''

இவ்விருதீர்மானங்களும் பட்டிருப்பு எம். பி. திரு பி. கணேசலிங்கத்தினால் நேற்று நடைபெற்ற மட்டக்களப்புமாவட்ட அபிவிருத்தி சபையின் கூட்டத்தில் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு எஸ் சம்பந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பன்னிச்சங்கேணி, வாகரை ஆகிய பகுதிகளிலேற்பட்டுள்ள உள்ளூர், வெளியூர் மீனவர் பிரச்னை தொடர்பாக ஆராயப்பட்டே மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கடற்றொழில் அமைச்சின் பிரதிநிதி திரு. கே. மன்னடே, மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அதிகாரி திரு. எஸ். சிறீஸ்கந்தராசா, வாகரை உதவி அரசாங்க அதிபர் திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் இக்கூட்டத்திற்கு விசேடமாக அழைக்கப்பட்டிருந்தனர்.

அமைச்சர் தேவநாயகம், அமைச்சர் இராசதுரை, மட்டக்களப்பு 2வது எம். பி. ஜனாப் பரீத் மீராலெப்பை, ஐ. தே. கட்சி மாவட்டசபை உறுப்பினர் திரு. கே. மாணிக்கம் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. [வெ]

## ''உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கு தயாராக இருக்கவேண்டும்''

-- பரு. எம். பி.

[புலோலி]

''பருத்தித்துறைநகரசபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னரைவிட பெரு வெற்றியீட்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.''

இவ்வாறு பருத்தித்துறைத் தொகுதி தமிழர்விடுதலைக்கூட்டணிக் கிளைகள் புனரமைப்பு ஆலோசனைக்கூட்டத்தில் உரையாற்றிய பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் கூறினார்.

ஆத்தியடி சைவ மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய எம். பி. துரைரத்தினம் குறிப்பிட்டதாவது:-

தற்போது கூறப்படுவது போன்று உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் எதிர்வரும் மே மாதம் நடைபெறுமென நான் நம்பவில்லை. எனினும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் எப்போது நடந்தாலும் நாம் அதற்குத் தயாராக இருக்கவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழினத்தின் விமோசனம் கருதி இயங்கும் மக்கள் இயக்கமாகும். எனவே இவ்வியக்கத்தைவளர்த்துப் பலப்படுத்த வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும்.

தமிழர்விடுதலைக் கூட்டணிக் கிளைகள் புனரமைப்புச் செய்யப்படவேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு உண்மையாகவும், நேர்மையாகவும், கண்ணியத்துடனும் சேவையாற்றக்கூடியவர்களையே அங்கத்தவர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும், இந்நடவடிக்கையில் கிளைகள் அவதானமாகச் செயற்படவேண்டும்.

பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் பட்டியலில் யார் யாரை வேட்பாளர்களாக நியமிக்கவேண்டும் என்பதை பருத்தித்துறை நகரசபைத் தமிழர் விடுதலைக் கூட்டணி மூலக்கிளைதான் சிபார்சு செய்யவேண்டும். இதன் அடிப்படையிலேதான் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடம் வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும்.

நகரசபைத் தேர்தலைப் பொறுத்தவரையில் நகரசபை எல்லைக்குள் இயங்கும் பருத்தித்துறை, புலோலி கிழக்கு, தும்பளை, புலோலி மேற்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகள் அவதானமாகச் செயற்பட வேண்டும். [க]

## இருமிநாசினி தெளித்த இருவர் மரணம்

[துணுக்காய்]

துணுக்காய் பகுதியில் கிருமிநாசினி தெளித்த இருவர் ஒரேநாளில் மரணமடைந்துள்ளனர்.

துணுக்காய் ஒட்டன்குளம் கிராமத்தைச் சேர்ந்த வாலிபரொருவர் தனது நெல்வயலுக்கு கிருமிநாசினி தெளித்துவிட்டு வீடுவந்து குளித்துவிட்டு நித்திரை செய்தபின் எழுந்த நபர் தலையை சுற்றுவதாக கூறி மீண்டும் படுத்துக் கொண்டாராம்.

பின்பு அவரின் நிலைமையை அவதானித்த வீட்டுக்காரர் மல்லாவி வைத்தியசாலைக்கு கொண்டுசென்றபோது மரணமாகிவிட்டார்:

இதேநாள் வவுனிக்குளம் பாண்டியன் குளத்தில் வாலிபர் ஒருவர் தமது வயலில் மருந்து தெளித்த போது மயங்கி வயலில் விழுந்தார் என்றும் பின்பு வயலில் நின்றவர்கள் அவரை தூக்கி மல்லாவி ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்து சிகிச்சை மேற்கொண்டபோது இறந்துவிட்டார் என்றும் கூறப்படுகின்றது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு, வி. வேதநாள் விசாரணை நடத்தினார். மரண விசாரணையில் பாதுகாப்பற்ற முறையில் கவனயீனத்தால் ஏற்பட்ட மரணங்கள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [க]

### பொலிஸ் ஜீப்பை சேதமாக்கிய வழக்கு

## சாட்சியம் முரண்பாடு; எதிரிகள் விடுதலை

[புலோலி]

வல்வெட்டித்துறைபொலிஸ் ஜீப்பிற்கு கல்லெறிந்து சேதப்படுத்தியவழக்கு விசாரணையில் சாட்சிய முரண்பாட்டால் எதிரிகள் இருவரையும் பருத்தித்துறை நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் யாழ்ப்பாண விஜயத்தின் முதல்நாள் வல்வெட்டித்துறைப் பொலிஸ்சப் இன்ஸ்பெக்டர் திரு. பிரேம்லால் தலைமையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வல்வெட்டித்துறைச்சந்தியில் வைத்து பொலிஸ் ஜீப்பிற்குக் கல்லெறிந்து சேதப்படுத்தி பொலிசாரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த முனைந்தார்கள் என்று குற்றஞ்சாட்டி வல்வெட்டித்துறைப் பொலிசார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்திருந்தனர்.

இவ்வழக்கு விசாரணை பருத்தித்துறைநீதவான் திரு வி.பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 1-ம் எதிரியாக நடராசசுந்தரமும் 2-ம் எதிரியாக சோதி சிவமும் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். டி. இரத்தினசிங்கமும் 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி என். கிருஸ்ணராசாவும் ஆஜராகி வழக்கை நடாத்தி வந்தனர்.

வழக்கு விசாரணையின் போது சாட்சிய முரண்பாடுகள் காரணமாக நீதவான் எதிரிகளை விடுதலை செய்து வழக்கைத் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கினார்.

## ''உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்''

[நீர்வேலி]

''யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உப-உணவுப்பொருட்களே பெருமளவில் எமது நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்கின்றன இதனை கருத்திற்கொண்டு விவசாயிகள் உற்பத்தியை அதிகரிக்க முன்வர வேண்டும்.''

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா நீர்வேலி பயிர்ச்செய்கை நிலையம் நடத்திய விவசாயிகள் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;-

''திருத்தப்படாதுள்ள கலட்டிக்காணிகளையும், தரிசு நிலங்களையும் திருத்தி விவசாயத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டை செழிப்படையச் செய்து, நாமும் பலன் பெறலாம்,' என்று கூறினார்.

கோப்பாய் எம். பி. திரு. எம் ஆலாலசுந்தரம், உதவி அரசாங்க அதிபர் திரு: கு கிட்டிணர், சமநல சேவை ஆணையாளர் திரு. பரமலிங்கம் உட்பட பலர் இவ்விழாவில் உரையாற்றினர்.

### ''யாழ். பரியோவானில்

# கட்டிடவிருத்தியைவிட கல்வி விருத்திக்கு அதிமுக்கியம்''

- அரச அதிபர்

(அரியாலை)

''பரியோவான் கல்லூரி வளர்ந்துவந்த விதத்தை நாம் அவதானிக்கும்பொழுது கட்டடங்களின் விருத்தியிலும்பார்க்கக் கல்வியின் விருத்தியிலேயே அது முன்னணியில் நிற்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது''.

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபரும், யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா, யாழ் பரியோவான் கல்லூரியில் நாலரை லட்சம் ரூபாசெலவில் கட்டி முடிக்கப்பட்ட எட்டு வகுப்பறைகளைக் கொண்ட ஏ. டபிள்யூ. இராசசேகரம் கட்டிடத்தின் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர்திரு. சீ. ஈ. ஆனந்தராஜன் தலைமையில் மண்டபத் திறப்பு விழா நடைபெற்றது. அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''முதலில் இக்கல்லூரியின் மாணவனாகவும், பின்னர் பழைய மாணவனாகவும், இன்று ஒரு அபிமானியாகவும் இக்கல்லூரியில் புதிய கட்டிடங்கள் வளர்ந்துவருவதைப் பெருமையுடனும், மகிழ்வுடனும் அவதானித்து வருகிறேன்.

35 வருடங்களுக்கு முன்னர் மாணவனாக நான் இங்கு படித்த பொழுதே இங்கு சிறந்த விஞ்ஞானகூடமொன்று கட்டப்பட்டுவிட்டது. அதுவே மிகச் சிறந்த கட்டிடமாக அன்று இருந்தது. பெரிய வகுப்பறைகளையும், மண்டபங்களையும் கட்டுவதிலும் பார்க்க கல்வியிலும், ஆய்வுகூட வசதிகளிலுமே பரி. யோவான் கல்லூரி கூடிய அக்கறைகாட்டி வந்துள்ளது புதிய கட்டிடத்திற்கு திரு. இராசசேகரம் அவர்களுடைய பெயரைச் சூட்டுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். அவர் முதலில் மாணவனாகவும், பின்னர் நீண்டகாலம் ஆசிரியராகவும், இறுதியில் உப அதிபராகவும், பின்னர் அதிபராகவும் மிகவும் நீண்ட காலம் கல்லூரியுடன் தொடர்புடையவராக இருந்தார் விசுவாசத்துடனும், ஈடுபாட்டுடனும் கல்லூரிக்காகத் தன்னால் இயன்றளவு சிறப்பாகச் சேவையாற்றியுள்ளார். ஆகவே அவரது நினைவு இவ்விதம் பேணப்படுவது மிகவும் பொருத்தமானதாகும்'' என்று குறிப்பிட்டார். [கி]

## ''கலைஞர் பத்மநாதன் நாதஸ்வரக் கல்லூரி அமைக்கவேண்டும்''

- ஆலால் எம். பி.

[அரியாலை]

''நாதஸ்வரக் கலைஞர் திரு. என். கே. பத்மநாதனின் நாதஸ்வரத்திறனையும், இசைஞானத்தினையும் அரசுமதித்து ''கலாசூரிய'' என்ற சிறப்பு விருதை வழங்கிக் கௌரவித்துள்ளது. இசையை ரசிக்கும் ரசிகன் என்ற முறையில் கலாசூரிய என். கே. பத்மநாதனைப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.''

இவ்வாறு கோப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு, மு ஆலாலசுந்தரம் புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையில் 'கலாசூரிய' என். கே. பத்மநாதனுக்கு நடாத்தப்பட்ட பாராட்டு விழாவிற்குத் தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆலயபரிபாலன சபைத்தலைவர் எஸ். இராசரத்தினத்தின் இல்லத்திலிருந்து தலைவர், விழா அமைப்பாளர் ஆகியோர் கிராமமக்கள் சகிதம் ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

பரிபாலன சபையின் உபதலைவர் வைத்திய கலாநிதி இ. நன்னித்தம்பி வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. மு. ஆலாலசுந்தரம் எம். பி. தொடர்ந்து பேசுகையில், ''இசை வளரப் பத்மநாதன் அவர்கள் தொடர்ந்தும் உழைக்கவேண்டும். அவர் தனது முயற்சியால் நாதஸ்வர இசைக் கல்லூரி ஒன்றை அமைத்து நாதஸ்வர இசை ஞானத்தை இளம்தலைமுறையினர் அறியச் செய்ய வேண்டும்'' என்றார். [கி]

## இலங்கை:.,

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிற்படிப்பு மாணவர்களும், பயிற்சியாளர்களும் உள்ளனர். 1960 க்குப்பின் 660 இலங்கை மாணவர்கள் சோவியத் யூனியனில் கல்வி பயின்று இன்று தமது நாட்டில் பணியாற்றுகிறார்கள்'' என்றும் அவர் கூறினார்.

## தலைமன்னாரில் தமிழ் இல்லை

[மன்னார்]

தலைமன்னாரிலுள்ள அரசினர் வாடி வீட்டின் முன்பாகவுள்ள பெயர்ப்பலகையில் தமிழ் இடம்பெறவில்லை, இதனால் தலைமன்னார் துறைமுகத்தை வந்தடையும் ஆங்கிலம், சிங்களம் மொழிகள் தெரியாத உல்லாசப் பயணிகள் வாடிவீடு எங்கிருக்கிறதெனத் தெரியாது பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர். [க]

## வீதியமைப்பு

(புலோலி)

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை புலோலி உப அலுவலக எல்லைக்குட்பட்ட மாயக்கை குடியேற்றத் திட்டவீதி 15,000 ரூபா செலவிலும் வராத்துப் பளை - முதலாங்கட்டை வீதி 20ஆயிரம் ரூபா செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வீதி அமைப்புக்கான நிதியினை பருத்தித்துறை எம். பி. திரு, கே. துரைரத்தினம். பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்திருந்தார்.

புலோலி தெற்கு முருகையன் கோவிலடி வீதி 20 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படுவதற்கான ஆரம்பநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கரபந்தாட்டப் போட்டி

(பண்டத்தரிப்பு)
மாதகல் விபுலானந்தர் படிப்பகத்தின் 8வது ஆண்டு நிறைவுவிழா எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடைபெறுவதை முன்னிட்டு வடமாகாண ரீதியில் மின்னொளியிலான கரபந்தாட்டப்போட்டியையும், மகளிருக்கான வலைப்பந்தாட்டம் போட்டியையும், மகளிருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியையும் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிகளில் பங்கு பற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் தங்களது விண்ணப்பங்களை படிப்பகச்செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர்.


றீகல் (யாழ். நகர்)
15-ந் திகதியுடன்
எங்க வீட்டுப் பிள்ளை
வெளியேற இருக்கிறுர் அதற்குள் சந்தியுங்கள்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி. ஞாயிறு 2-30
முரட்டுக் காளை

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00 9-30
9th—14th "FRENCH FILM FESTIVAL"
14th: Molliere (Moliere)-Color

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
10-30, 2-00, 4-30, 7-00, 9-30
14th&15th only Walt Disney's
SNOW WHITE AND SEVEN DWARFS
(பாடசாலை பிள்ளைகள் மனேஜருடன் தொடர்பு கொண்டு விசேட ஒழுங்குகள் செய்துகொள்ளலாம்.)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
Body Heat
(Adults only)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ராணி தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
ஆந்திரா முதலமைச்சர் என். டி. ராமராவ், ஜெமினி - சாவித்திரி நடித்த
மாயா பஜார்
பாடசாலைப் பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்துதரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ்நகரில்இதுவே. கடைசி சந்தர்ப்பம்
இன்னும் சில தினங்கள் மட்டும்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்)
✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
"வசந்தமாளிகை"
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

மனோகரா தினசரி 10-30, 2-15, 6-00, 9-45
(யாழ். நகர்)
ஆந்திர முதலமைச்சர் என். டி. ராமராவ்
கே. மாலதி, எஸ். வி. ரங்கராவ், ரேலங்கி
பாதாள பைரவி
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய பிரதி)

ராஜா தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ்- நகர்)
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி (ஈஸ்ட்மன் கலர்)
பாடசாலை பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.


## இன்றைய பலன்

மாசி மாதம் 3-ம் திகதி
திங்கட்கிழமை
(14—2—83)

மேடம்: சகோதர வழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும் உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும். உஷாராக இருக்கவேண்டும். அடக்கம் நன்று.

இடபம்: விளை பொருள் விருத்தியுடன் விருத்திற்கும். இடம் உண்டு. தாய்வழித்தனமும் தாராளமாகக் கிடைக்கும். எதிர்கால வாழ்வுக்கான புதிய திட்டத்தை உருவாக்கும்.

மிதுனம்: மகிழ்ச்சிகரமான தினம் நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள் கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமானதாக இருக்கும் பொன்னான தினம்.

கடகம்: வாய்வுக் கோளாற்றினால் வேதனைப் படுவீர்கள் உணவுவிடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும் எதிரிகளின் கோழைத்தனமான நடவடிக்கைகள் அமைதிகுலைக்கும்.

சிங்கம்: காதல் விவகாரங்கள் தலைதூக்கும் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும் களஸ்திர வழியால் பொருள் வரவுக்கு இடம் ஏற்படும் பெரியோர்கள் ஆதரவு கிடைக்கும்.

கன்னி; ஏக்கத்தின் சாயல் தாக்கும் எதிர்பாராத விதமாக சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும் உள்ளக்கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும் நிதானம் வேண்டும்.

துலாம்: புதிய பொருள்களை கொள்வனவு செய்வதற்கு இன்று நல்ல வெளியிடத்து தொடர்புகளிலும் நல்ல மாறுதல்கள் தென்படுகின்றது. மாணவர்களாயின் கல்வியில் அதிக ஆர்வம் பிறக்கும்.

விருட்சம்; கடமையில் ஊக்கம் பிறக்கும் எதையும் துரிதமாக செய்யின் வெற்றிகாண்பீர்கள் சிலருக்கு நன்மையான இடமாற்றமும் ஏற்படலாம் தெய்வத்தின் துணையுண்டு.

தனு: எதிர்பாராத பொருள் வரவும் பொதுசன மதிப்பும் இன்று கிடைக்கலாம். நன்மையான காரியங்களில் பணச் செலவு ஏற்படும். டாக்டர்கள் தொழிலில் பிரகாசிக்க முடியும்.

மகரம்; எதிலும் தடுமாற்ற நிலை ஏற்படும் குசுகுசுப்பேச்சுக்கள் மூலப் அவதூறுகள் வரப்படலாம் வியாபாரத்துறையில் மந்தநிலை காணப்படுகின்றது. உடல் நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

கும்பம்: அரசியல் வாதிகளுக்கு இன்று அடிசறுக்கலாம் நான் என்ற அகம்பாவத்தை அடக்கிகொள்ளவும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வேண்டும்.

மீனம்: வீட்டில் சுபகருமங்கள் இடம்பெறும் பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர் கைத்தொழில் புரிபவர்களுக்கு நல்ல வருவாய் உண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(புலோலி)
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் வெள்ளிவிழா ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது. இவ் வெள்ளி விழாவையொட்டி அகில இலங்கை ரீதியில் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

இவ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வவனியா ஜொலிவிளையாட்டுக் கழகம் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகத்துடன் மோதி 8-1 கோல்களால் வவனியா ஜொலி விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது. யாழ். பாஷையூர் சென்ற் அந்தனீஸ் விளையாட்டுக்கழகத்துடன் வல்வை விளையாட்டுக்கழகம் மோதி 1-6 கோல்களால் வல்வைவிளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

# சென். ஜோன்ஸ் இன்னிங்ஸால் வெற்றி

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையே, நேற்று முன் தினம் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளின் சில முடிவுகள் வருமாறு:

### சென். ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், சென். ஜோன்ஸ் கல்லூரிக் கோஷ்டி இன்னிங்ஸால் வெற்றி பெற்றது. சென் ஜோன்ஸ் கோஷ்டியின் சிறந்த துடுப்படி வீரரான முரளீதரன் 99 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தது குறிப்பிடத்தக்கது. இப் போட்டி மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### வெற்றி-தோல்வி இல்லை

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும், யாழ். இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

மானிப்பாய் இந்து முதல் இன்னிங்ஸில் 138 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 206 ஓட்டங்களையும் பெற்றது. யாழ் இந்துக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 216 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் ஆட்டம் முடிவடையும் வரை யாழ். இந்து 4 விக்கெட் நஷ்டத்துக்கு 58 ஓட்டங்களைப் பெற்றது.

## ஒய்வு எடுக்கச் சொன்னுர் கணவர் மனைவியோ வாழ்விலிருந்தே ஒய்வு எடுத்தார்!

(மட்டுவில்)
பயிருக்கு நீர்ப்பாய்ச்சிக் களைப்புற்ற மனைவியைத் தோட்டத்தைவிட்டு வீட்டிற்குப் போய் ஓய்வெடுக்கும்படி கணவர் கூறினாராம். மனைவி அதனைச் செவிசாய்க்காது போகவே சற்றுக்கோபமாகப் பேசிப் போகும்படி மனைவியை வலியுறுத்தியதும் மனைவி கிருமி நாசினியை அருந்தி மரணமானாராம். மரண விசாரணையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இப்பரிதாப சம்பவம் மிருசுவில் படித்த இளம் பெண்கள் குடியேற்றத் திட்டத்தில் இடம் பெற்றது. சாவகச்சேரிப் பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர்.

5 பிள்ளைகளின் தாயான சரவணமுத்து பரமேஸ்வரி என்ற 26 வயதுப் பெண்ணே இப்படிப் பரிதாப மரணத்திற்குள்ளானவராவார். சாவகச்சேரிப் பகுதித் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் மரணவிசாரணை நடத்தினுர். பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. பி. கிருஷ்ணபிள்ளை சாட்சிகளை ஆஜர் செய்தார்.

இறந்தவரின் கணவர் சரவணமுத்து, தாயார் எஸ். செல்லம்மா, ஆகியோர் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

## ஹாட்லியின் கிரிக்கெட் போட்டி

(புலோலி)
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 1983-ஆம் ஆண்டிற்கான கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இம்மாதம் 18 ம், 19 ம் திகதிகளில் ஹாட்லிக் கல்லூரிக்கும், யூனியன் கல்லூரிக்கும் இடையேயான கிரிக்கெட் போட்டி யூனியன் கல்லூரி மைதானத்திலும் இம்மாதம் 25ம், 26ம் திகதிகளில் ஹாட்லிக் கல்லூரிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமான கிரிக்கெட் போட்டி ஹாட்லிக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

மார்ச் மாதம் 4ம், 5ம் திகதிகளில் ஹாட்லிக் கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்குமான கிரிக்கெட் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலும் 11ம், 12ம் திகதிகளில் ஹாட்லிக்கல்லூரிக்கும், மகாஜனக் கல்லூரிக்குமான போட்டி மகாஜனக் கல்லூரி மைதானத்திலும 18ம், 19ம் திகதிகளில் ஹாட்லிக் கல்லூரிக்கும், யாழ். இந்துக் கல்லூரிக்குமான போட்டி ஹாட்லிக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (வெ)

## பாங்கொக் பயணமானுர்



யாழ் மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. ஜே. எஸ் எஸ் இரண்டு வாரம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உணவு விவசாய நிறுவனத்தால் நடாத்தப்படும் 'நாடுகளின் உணவுதானியங்களின் உற்பத்தியும் தரமும்' பற்றிய மகா நாட்டில் பங்கு பற்றுவதற்காக உணவு ஆணையாளரின் பிரதிநிதியாக பாங்கொக் பயணமானுர்.

வடமாகாண சாரணர் இயக்கத்தின் தலைவராகவும், கோப்பாய் புனித மரியாள் ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் இருந்துவரும் இவர் முன்னைநாள் கோப்பாய் நீர்வேலி கிராம சபைகளின் விசேஷ ஆணையாளரும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

# கடத்தல்காரர் சுட்டுக்கொலை!

பாங்ஹொக், பெப். 13

பர்மாவின் பிரபல அபின் கடத்தல்காரர் லாவோஸ் ஷெல் பொலிசாரினால் சுட்டு கொல்லப்பட்டார்.

1977ம் ஆண்டு பாங்ஹொக் சிறையிலிருந்து தப்பியோடிய லாவோஸ் ஷெல் தொடர்பாக தகவல் தருவோருக்கு சன்மானம் வழங்கப்படுவதாகவும் பொலிஸ் திணைக்களம் தெரிவித்திருந்தது.

இரகசியத் தகவலொன்றின் பேரில் பர்மாவின் எல்லைப் புறத்திற்கு சென்ற பொலிசார் இருவரை சுட்டுக்கொன்றதாகவும், அவர்களிலொருவரே லாவோஸ்ஷெல் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## சட்டவிரோத கள் விற்பனை:

# பொலிஸாரின் உதவியுடன் தீவிர கண்காணிப்பு!

(மாவிட்டபுரம்) [illegible] வலிதென்மேற்கு பகுதியில் சட்ட விரோதமாக கள்விற்பனை செய்வோர்கள் இறக்குவோர்கள் ஆகியோர் மீது பொலிசாரின் உதவியுடன் தீவிர கண்காணிப்பை மேற்கொள்ள வலி. தென்மேற்கு தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி பகுதியில் சங்கத்தின் வளர்ச்சிக்கு தடையாக இடம்பெற்றுவரும் சட்ட விரோத செயல்கள் பற்றி ஆராய்வதற்காக சங்கப்பணிமனையில் தலைவர் திரு. யோ. செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

இக்கருத்தரங்கில் காங்கேசன்துறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களும் யாழ். பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

மேற்படி சட்டவிரோத செயல்களை ஒழிக்க பொலிஸ் பகுதியினர் பூரண ஒத்துழைப்புத்தரவேண்டுமென தலைவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பதிலளிக்கையில் மேற்படிசட்டவிரோத செயல்களை ஒழிக்க சங்கத்திற்கு பூரணஒத்துழைப்பு தருவதாக உறுதியளித்தனர்.

இதனையடுத்து பொலிஸ் பகுதியினரின் உதவியுடன் மேற்படி பகுதியில் தீவிர கண்காணிப்பை மேற்கொள்ள சங்கத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (க)

## கைத்துப்பாக்கி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்குக்கேட்டது. இச்சம்பவம் பிற்பகல் 4-45 மணியளவில் நடைபெற்றது. ஆஸ்பத்திரிக்கு அவரைக்கொண்டு செல்வதற்கிடையில் இறந்துவிட்டார்.

எனதுசகோதரரின் மரணம் சம்பந்தமாக எவரையும் சந்திக்கவில்லை. இறந்த தாடி தங்கராசாவின் குடும்பத்தினருக்கும் எங்கள் குடும்பத்தினருக்குமிடையே ஏற்பட்ட காணிப்பிரச்னை சம்பந்தமாக இறந்த எனதுசகோதரர் அவர்களுடன் வாக்குவாதப்பட்டு சண்டை பிடித்ததாக என்னிடம் சொல்லியிருந்தார்'' என்றார்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு முன்னால் உள்ள வீட்டுக்காரரான சுந்தரலிங்கத்தின் பிள்ளைகள் பிரேமலதா (10-வயது), சுதாகரன் (7-வயது) ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட பதில் நீதவான் தீர்ப்பு வழங்குவதை ஒத்தி வைத்தார்.

யாழ். மருத்துவ பீடபேராசிரியரும் பதில்சட்டவைத்திய அதிகாரியுமான வைத்திய கலாநிதி எஸ். சரவணபவானந்தன் பிரேத பரிசோதனை நடாத்தினார்.

வடபகுதி இராணுவ அதிகாரி பிரிகேடியர் பல்தசார், பொலிஸ் அதிபர் ஏ. ஈ. ஆனந்தராஜன் ஆகியோரும் சம்பவம் நடைபெற்ற ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

இரகசியப் பொலிசார் இறந்தவரைப் படம்பிடித்துச்சென்றனர். (மா)

## இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாண வெங்காய ஏற்றுமதி என்ன ஆச்சு?

''யாழ்ப்பாண வெங்காயம் டுபாய் செல்கிறது'' - இது தான் முதலில் வந்த செய்தி.

பின்னர்; ''யாழ்ப்பாண விவசாயிகளுக்கு பெரு அதிர்ஷ்டம்! வெங்காயத்தை மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது'' - என்று செய்தி வெளிவந்தது.

ஆனாலும் விஷயம் இத்துடன் முடிவடையவில்லை!

யாழ்ப்பாண வெங்காயத்தை மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய, ஏற்றுமதி ஊக்குவிப்புப் பணியகத்தின் குழுவொன்று அங்கு புறப்பட்டுச் சென்றுவிட்டது என்றும், இக்குழுவின் மத்திய கிழக்கு நாடுகள் சுற்றுவிஜயம் முடிவடைந்ததும் யாழ். வெங்காயம் வான்மூலம்-மன்னிக்கவும் 'பிளேன்' மூலம் பறக்கும் என்றும் செய்தி அடிபட்டது.

ஆனால் இன்று - ஈ. வெ. ரா. பெரியார் வாக்குப்பொய்க்கவில்லை.

யாழ். வெங்காய ஏற்றுமதி; பெரியாரின் வெங்காயக் கதையாகவே போய்விட்டது!

— 'ஊடுருவி'

## குடும்பத்திட்ட கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

யாழ். தேசிய கூட்டுறவுச் சபையின் ஆதரவில் பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச்சங்க மகளிர் குழு உறுப்பினர்களுக்கு குடும்பத்திட்டம் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிர் குழுத் தலைவி திருமதி பேளி அத்தனுசியார் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் யாழ். சுகாதாரப்பிரிவு தாம் சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி பி. பொன்னம்பலம் கலந்து கொண்டு குடும்பநலம் பற்றியும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் பற்றியும் விளக்கி உரை நிகழ்த்தினார்.

கருத்தரங்கில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் அவர் விளக்கமாக பதில் அளித்தார். சங்க கல்வி உத்தியோகத்தர் திரு. சி நடராஜா இதற்கான ஒழுங்குகளை செய்திருந்தார். (க)

## வாக்களிப்பு

(புதுடில்லி)

அசாம் மாநிலத்தின் சட்டப் பேரவைத் தொகுதிகள், லோகசபா தொகுதிகளுக்கான முதல்கட்ட வாக்களிப்புஇன்று ஆரம்பமாகவுள்ளது. (வெ)


# ஹோம் பிறைன்ஸ் லிமிட்

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறைன்ஸ் லிமிட், 82, கன்னாதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறைன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்
III. பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

# ஹோம் பிறைன்ஸ் லிமிட்

82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்

ஹோம் பிறைன்ஸ் லிமிட்
463, காலி வீதி, கொழும்பு-3


## மரண அறிவித்தல்

எஸ். பிரான்ஸிஸ் யோசவ்

சிலாலையைச் சேர்ந்த S.F.யோசவ் [Joseph] காலமானார். இவர் காலஞ்சென்ற தாக்கம்மாவின் அன்புக் கணவரும். இராணி, மாலி, Dr. பாக்கியசோதி ஆரோக்கியமாதா வைத்தியசாலை, பண்டத்தரிப்பு), இரட்ணு (Don Beach Hotel, Negombo) ஆகியோரின் தந்தையாரும், தார்சீசியஸ் (Charity Commissioner, Colombo), எமில் Saudi Arabia, ஆவோன், சோதிராணி, (Urban Development Authority) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற அக்னெஸ், எலிசபெத், காலஞ்சென்ற வண. பிதா பீற்றர், காலஞ்சென்ற சங்கைக்குரிய தாயார் வின்செண்ற், றோசலின், சங்கைக்குரிய சகோதரி மேரி பப்ரிஸ்ற் (Holy family Convent, இளவாலை) ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் 15ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். (6190)

## ஆனையிறவு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அழகிரி, பொன்னம்பலம் ஆகியோர் உட்பட 6 பேர் நேற்று குருநகர் இராணுவ முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை பெற்றோர் சந்திப்பதற்காகவே குருநகர்இராணுவமுகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டனராம்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஜெயப்பிரகாஷ் குருநகர் முகாமுக்கு மாற்றப்பட்டதால் இவரை யாழ். எம். பி.நேற்று சந்திக்க முடியவில்லை. இவர்களில்சிலர் விரைவில் விடுதலை செய்யப்படலாம் எனத்தெரியவருகிறது. (மா)

## யாருடையது?

யாழ்ப்பாணம் பெரியகடை வீதியில் கண்டெடுக்கப்பட்ட தேசிய அடையாள அட்டையொன்றினை திரு. ஏகாம்பரம் என்பவரும், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் கண்டெடுக்கப்பட்டபிறப்புக்கோர்வையொன்றினை திரு. கே. சுப்பையா என்பவரும் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர் தகுந்த அத்தாட்சிகாட்டிப் பெற்றுக் கொள்ளம்.


# Radio And Electronics Engineering Course Theory And Practicals

## யாழ். நகரில்

சகல தொழில்நுட்ப வசதிகளுடனான எமது நவீன ஆய்வுகூடத்தில், கொழும்பில் தன்னிகரற்றுத் திகழ்ந்த திறமையும், தகைமையுமுடைய ஆசிரியரிடங்கற்று நிறைபலன்பெற நாம் அளிக்கும்:

- RADIO:- பழுதறப்பழுது பார்க்கவும் பிறருதவியின்றி உருவாக்கவும்.
- TAPE RECORDER
- RECORD PLAYER
- HI-FI STEREO AMPLIFIER
- RADIO CONTROL
- TRANSFORMER

இவற்றோடு இன்னோரன்ன பல இலத்திரனியற்கருவிகளையாவற்றின் அடிப்படை அமைப்புப்பற்றிய தெளிவானTheory & Practicalsம் அவற்றைப் பாரிய முறையில் உருவாக்கவும் பழுது பார்க்கவும்,

- ஒளியின் தாக்கத்தால் இயங்கும் இலத்திரனியற் கருவிகளை உருவாக்கவும்
- DIGITAL ELECTRONICS:- Theory and Practicals.
- T.V. & VEDIO RECORDERS:-பற்றிய அடிப்படை அறிவும் புகட்டப்படும்.

சுயதொழில் செய்ய விரும்புவோருக்கும், பிற நாடுகளில் வேலை வாய்ப்புப்பெற விரும்புவோருக்குமோரரிய வாய்ப்பு.

வகுப்புகள் ஆரம்பம்: 23-02-1983

# CANTABIA INSTITUTE

21, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

21, Main Street,
Jaffna.

TELEPHONE: 24201


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.D. 100236/81 [illegible] - P. O. Box: 49. Telegram: Eelanadu, Telephone: 22389 — 24126.